
17

கருணாகரன்

# உலகின் முதல் ரகசியம்



JPL
C13824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

17



15 JUN 2022

# கருணாகரன்

இலங்கையின் வடக்கிலுள்ள இயக்கச்சி என்னும் கிராமத்தில் பிறந்து தற்பொழுது கிளிநொச்சியில் வசித்து வருகிறார். ஈழப் போராட்ட இயக்கங்களின் வெளியீடுகளான பொதுமை வெளிச்சம் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றியவர். சமூகச் செயற்பாட்டாளரான கருணாகரன், தற்போது சுயாதீன ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வருகிறார். பத்தி எழுத்து, ஒளிப்படத்துறை ஆகியவற்றிலும் ஈடுபடுகிறார்.

**இதுவரையிலான கவிதைத் தொகுப்புகள்**:

ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள், பலியாடு, எதுவுமல்ல எதுவும், ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள், நெருப்பின் உதிரம், படுவான்கரைக் குறிப்புகள், இரத்தமாகிய இரவும் நினைவின் இறுதி நாள், கடவுள் என்பது துரோகியாயிருத்தல்.

**சிறுகதைகளின் தொகுப்பு:** வேட்டைத்தோப்பு
**பத்திகளின் தொகுப்பு:** இப்படி ஒரு காலம், அன்பின் திசைகள்
**நேர்காணல்களின் தொகுப்பு:** புகைப்படக்காரன் பொய் சொல்ல முடியாது.
சிங்களத்தில் *Mathaka Wanniya* (வன்னி நினைவுகள்) என்ற மொழிபெயர்ப்பு நூல்.

இவருடைய கவிதைகள் சிங்களம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.
மின்னஞ்சல் - *poompoom2007@gmail.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் ரகசியம்

கவிதைகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

13824 cc

கருணாகரன்

KOHA-JPL

KOHA-JPL

288305

புலம்

286305 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
94.8111

**உலகின் முதல் ரகசியம்**

கவிதைகள்

**கருணாகரன்**

முதல் பதிப்பு: டிசம்பர் 2019

இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 2021

பக்கங்கள்: 124

அட்டை வடிவமைப்பு: ஜீவமணி

நூல் வடிவமைப்பு: நற்பின்னை கிரியேஷன்ஸ்

அச்சாக்கம்: ஸ்ரீ துர்கா பிரிண்டர்ஸ், சென்னை- 05.

**Ulakin Mudhal Ragasiyam**

Poems

**Karunagaran**

First Edition: December2019

Second Edition: February 2021

Pages: 124

Printed at Sri Durga Prints, Chennai-05.
Cover Design: Jeevamani

Book Design: The Bright Studio
ISBN: 978-81-9078-841-0

புலம்

வெளியீடு: **புலம்**
332/216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி: 98406 03499
மின்னஞ்சல்: pulam2008@gmail.com

Published by **Pulam**
332/216,Triplicane High Road,
Triplicane,Chennai - 600 005.
Mobile: 98406 03499
Email: pulam2008@gmail.com

**விலை ரூ. 120**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 JUN 2022

நெருக்கடிக் காலத்தில் எங்களுக்கு
நெருக்கமான உறவாக நின்று
மடியேந்திக்கொண்ட
**ஸ்ரீகுமரனுக்கும் [இயல்வாணன்]**
**பவானிக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி**

மறுபாதி, மலைகள், காலச்சுவடு, அம்ருதா, ஞானம், கலைமுகம், மறுகா, நடு, காலம், புலம் மற்றும் சித்தாந்தன், சி.ரமேஸ், சிபிச்செல்வன், கண்ணன், சுகுமாரன், தளவாய் சுந்தரம், தி.ஞானசேகரன், எமில், மலர்ச்செல்வன், கோமகன், வசந்தி, ப.தயாளன், செல்வம், செந்தூரன், “புலம்” லோகநாதன் ஆகியோருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறதியிடம் அழைத்துச் செல்லுமாறு
நினைவிடம் கெஞ்சுகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


காற்றிலே கரைந்த விமானம் ........ 11
புதிர்முனை ........ 12
முத்திரை ........ 13
தேவதேவனைச் சந்திக்கும்போது ........ 14
பூனைக்குட்டியாகி ........ 15
திருவிழாப் பொம்மை ........ 16
கண்களிலிருந்த இளவேனில் ........ 18
அன்புச்செடி ........ 19
அன்பின் சிறகு ........ 20
உலகின் முதல் ரகசியம் ........ 21
விநோத வழி ........ 23
மழை வரைந்த மஞ்சட்குருவி ........ 24
சிறகுலகம் ........ 25
காற்று தொலைத்தவள் ........ 26
அழகு ........ 28
ஒருபோது தைத்த முள் ........ 30
தவளை மணி ........ 32
கோடைத்தெய்வம் ........ 33
பறவைப் பெருமழை ........ 34
கடவுளின் குற்றம் ........ 35
பற்றியெரிந்த உலகில் ........ 36
தோன்றிய தெய்வம் ........ 37
மூன்றாவது கண் உருவாகிய கதை ........ 38
பொறி ........ 39
சரிவு ........ 40
போதும் என்ற இடம் ........ 41
எலும்புகளைச் சேகரிப்பவன் ........ 43
சாட்சி? ........ 44
நீ என்ற காட்டுப் பாடல் ........ 45




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனித் தாங்கவே முடியாது என்று ........ 49
தங்கப் புரவி ........ 50
விசைப்பொறி ........ 51
மீன்கள் உருவாக்கிய கடல் ........ 52
நினைவுகளின் குவியல் ........ 53
வெள்ளை வெளி ........ 55
மிஞ்சியிருக்கும் ஒரேயொரு இசைக் கலைஞன் ........ 56
பறவையின் பயணப் பாதை ........ 57
குற்றம் ........ 58
அப்பம் ........ 59
தேன் – உதிரம் அல்லது மாமலர் ........ 60
வருக, பகிர்ந்துண்ணும் விருந்துக்கு ........ 61
சுடர் ........ 62
கல் அலை ........ 63
காட்டு மலர்கள் கூவி அழைக்கின்றன ........ 64
பாடம் ........ 65
நகை ........ 66
இந்த நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சி ........ 67
நெருப்பு ........ 68
சக்திக் கூத்து ........ 69
மிஞ்சிய செல்வம் ........ 71
Rainbow! ........ 72
விழிக்காலம் ........ 73
நினைப்பதற்கில்லை எதுவும் ........ 75
நன்னாரி ........ 76
நாய்களின் நிழலில் உடைபடும் பகல் ........ 78
பெண் ........ 79
கண்ணாடியில் மரம் பார்த்துக்கொண்டிருக்கிறது ........ 80
ஒரு நாளில்தான் எதிர்பாராதவை நிகழ்ந்தன ........ 81
அந்தரப்பூ ........ 83
பொம்மை ........ 85
வெள்ளைக் காட்சி ........ 86
சிவப்பு ........ 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையற்காரனின் கையில் கிடைத்த தோட்டம் ........ 88
ஒரு துளி உதிரம் ........ 89
வாள் ........ 91
இனியும் முடியாது என்றபின் ........ 92
அறியாத் தொலைவு ........ 93
உயிர்த்தெழல் ........ 94
பொழுதறியாமல் எழுதிய நாட்குறிப்பு ........ 95
நிகழ்ந்துகொண்டிருந்த பயணம் ........ 96
கிளிப்பச்சை ........ 97
புதிய சரித்திரக் குறிப்பு ........ 98
மழைக்கால மாலை ........ 99
கடவுளின் ரத்தம் ........ 100
தத்தளிப்பு ........ 102
உறைந்த நிழல் ........ 103
வெண்நீலப் பறவைகள் ........ 105
பளபளக்கும் கத்திகளுக்கு நடுவே ........ 106
விண்ணிசை ........ 107
அப்படியே நிகழ்ந்துகொண்டிருந்தது ........ 108
பேச்சின் பேரின்பத்தில் ........ 110
பறந்து செல்பவன் ........ 111
கதை ........ 112
அமிர்தம் ........ 113
கடவுளின் கண்ணீர் ........ 115
மறைக்க முடியாத காயங்களின் ஒளி ........ 117
மறுக்கப்பட்ட வார்த்தைகளின் விதி ........ 119
குழந்தையிடமிருந்த கேள்வி ........ 121
வித்தைப்பெண் ........ 123


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 JUN 2022

# காற்றிலே கரைந்த விமானம்

காற்றிலே கரைந்து போயிற்று
அந்த விமானம்

நான் பார்த்துக்கொண்டிருந்தேன்
புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த குதிரைகள்
அப்படியே பச்சையாகின

சமுத்திரத்திலிருந்த மீன்கள் எல்லாம்
கரைந்து நீராகின

காட்டிலே நின்ற மான்கள்
காடாகவே மாறின

அந்தக் குளம் அப்படியே மணலாகியது

அடுத்த கணம் எதுவாகும் என்றறிய முடியாமலிருக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிற்முனை

மணற்பாறைகளின் மீது படுத்திருக்கிறாள் பகல்
கடலில் இரவு நீந்த வேண்டும் என்கிறது கனவு
பூக்கள் ரகசியமாக பூனையிடம் கொஞ்சிக் கொண்டிருக்கின்றன
நதி எழுந்து மலையை நோக்கிச் சென்றது
கடலை நோக்கி நடந்துகொண்டிருந்த மரங்கள்
களைப்படைந்தபோது
ஒரு வழியின் கதையைக் கேட்டன

"ஆதி மரமும் போதி மரமும் ஒன்றாயிருந்தபோது
தான் நடக்கத் தொடங்கினேன்
இன்னும் களைப்பாறவில்லை" என்றாள் வழி

ஒரு ஈட்டி நேரே வந்து
ஊடறுத்துப் பிளந்து சென்ற இடத்தில்
விரிந்து கிடந்தது நிழல்

அதைக் காலமென்றாய் நீ
பழி என்றாள் அவள்
எதைச் சொல்ல நான்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138224 CC

# முத்திரை

286305

எந்த நட்சத்திரமென்று சொல்லுங்கள்
அதை எடுத்து
மீண்டும் சேயின் தொப்பியில் பதித்து விடுகிறேன்
அல்லது உங்களின் கையில் தந்து விடுகிறேன்

KOHA JPL

இன்னும் ஒரு நொடியே
உயிர்ப்பதற்கும் மரணிப்பதற்கும்

இறுதி நேரப்பிரார்த்தனை கேட்கிறது
வரவேற்புப் பாடலை இந்த நேரத்தில் பாடுவது யார்?

யாருடைய காலடிக்காகக் காத்திருக்கும் கல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதேவனைச் சந்திக்கும்போது

தேவதேவனைச் சந்திக்கும்போது கேட்க வேண்டும்
தொலைவிற்கும் அண்மைக்குமிடையில்
மேய்ந்துகொண்டிருக்கும் ஆடுகள்
உங்களிடம் சொன்ன ரகசியங்கள் என்ன என்று

அவர் அதைச் சொல்லாமல்
ரகசியமாகவே வைத்திருக்கவும் கூடும்

ஆனாலுமென்ன
நாம் கேட்பதிலொன்றும் தவறல்லவே

அவர் சொல்லாமல் விட்டாலும் கூடத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டியாகி

நதிக்கரையிலிருந்து வீடு திரும்பினேன்
நதியே வீட்டில் வரவேற்றது

வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றேன்
வீடு என்னை முந்திச் சென்றுகொண்டிருந்தது

படிகளில் ஏறித் திரும்பிப் பார்த்தேன்
இறங்கு எனச் சொல்லிச் சிரித்தன அதே படிகள்

யாரோ என்னை எடுத்துச் சென்றார்கள்
அவர்களை விட்டுச் சென்றுகொண்டிருந்தேன்

பூனைக்குட்டியாகித் துள்ளி
விளையாடிக்கொள்ள வேண்டியிருக்கிறது
சமயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாப் பொம்மை

பனங்குருவி இன்று வந்து
குளத்தில் நடந்த கதையைச் சொன்னது
திருவிழாப் பொம்மைகள் குளித்துக்கொண்டிருந்தபோது
ரத்தத்தோடு ஒரு கிளி பறந்து சென்றதை
எல்லோரும் பார்த்ததாக

பிறகு
பார்த்தவர்கள் கோபுர வாசலில்
பெருமாளைச் சந்தித்தபோது இதைப் பற்றிச் சொல்ல,
பெருமாளோ மௌனமாகக் கடந்து சென்று
தேவிடம் இதைச் சொன்னார்

தேவியோ வேர்க்கிளியிடம் அதைச் சொல்ல
வேர்க்கிளி,
அதைக் காற்றுடன் கதைத்துக்கொண்டிருந்த
கடிதத்திடம் சொன்னது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அந்தக்கிளி எப்படி ரத்தமாகியது
என்று தெரியவில்லை எவருக்கும்

எல்லோரும் ரத்தக்கிளியைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர்

ஆனால் அது யுத்தகாலமல்ல

இப்படி ஒரு புதிர்க்காலத்தில் முளைத்த புற்களில்
தாங்கள் நின்றுகொண்டிருப்பதாகக் கருதினார்கள் எல்லோரும்
உண்மையும் அதுதான்

இதை அறிந்த வேர்க்கிளி
பாடக்குறிப்பை எழுதிக்கொண்டிருந்த வசந்தியிடம் வந்து
ஒரு ரகசியக் குறிப்பைச் சொன்னது

அந்த ரகசியக் குறிப்பை அறிவதற்காகவே
பதினாறு தலைமுறைகளாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்
எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களிலிருந்த இளவேனில்

குளிர்காலத்தைக் கடந்து செல்லும்போது சந்தித்தோம்
உன்னுடைய கண்களிலிருந்தது இளவேனில்

சோளக்கொல்லையைக் கடக்கும்போது
கையசைத்துப் பாடியது காவற்பொம்மை

தாமதமாக வந்ததற்காக வருத்தம் தெரிவித்தாய்
இத்தனை மலர்வாக
இளவேனில் வந்ததையிட்டு மகிழ்ந்தேன்

நெருங்கி நீ வரும்போது
ஓடி வந்து முத்தமிட்டது காவற்பொம்மை

கோடையின் பாடல் எங்கிருந்து கேட்கிறது?
அதைப் பாடுவது யார்?

அது என் குரல்தானா?
உன் பாடல்தானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச்செடி

15 JUN 2022

மழைக்காற்றில் வாழைகள் சரிந்து வீழ்கின்றன
இல்லையில்லை எழுந்து பறக்கின்றன

முப்பதாண்டுகளின் முன்னே நான் விட்ட காகிதக்கப்பல்
ஏற்றிச் செல்ல வந்திருக்கிறது என்னை

பெய்துகொண்டிருக்கிறது மழை
காலடியில் பொங்கிய ஈரத்தில்
முளைத்து நிற்கிறாள் அன்புச் செடி

அக்கணத்தில்தான்
சொல்லாமல் சென்றவள்
பேசத் தயங்குகிறாள்

காயத்தின் வலி என்னவென்று கேட்கிறேன்
மழை பாடிக்கொண்டிருக்கிறது அவளைப் பற்றி

ஈர விறகுகளை எரிக்கும் வித்தையை
அறிந்திருந்த அம்மாவிடம் நான் கற்றதென்ன?
பெற்றதென்ன?
என்ற கேள்வி எழுந்து மழையில் நனைகிறது.

நீரின் குரலை நீ அறிய வேண்டும்
என்று சொன்ன தேவதையை நினைக்கிறேன்.

மழையில் முளைத்துக்கொண்டேயிருக்கிறாள்
காயமுடையாள்

முடிவேயில்லாமல்
இனிய துயரின் சங்கீதத்தைப் பாடிக்கொண்டிருக்கிறது மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் சிறகு

சைக்கிளில் வந்திறங்குகிறது புறா
பார்த்துக்கொண்டிருக்கிறேன்

கடையோரமாக அதை நிறுத்திவிட்டு
பறந்து போய்த் தன்னுடைய இணையுடன் சேர்கிறது மரத்தில்

பொங்கியூற்றும் காதல் ரசத்தில்
கிளைகளெங்கும்
பழங்கள் மலர்ந்துகொண்டிருக்கின்றன

பழங்களும் மலர்களும் ருசிக்கின்றன
அன்பின் வாசனையைக் கொண்டலைகிறேன்
தெரு முழுதும் காலந்தோறும்

அதோ சேர்ந்து பறக்கின்றன புறாக்கள்
ஓ.....
நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளும்
கூடவே பறந்துகொண்டிருக்கிறது

அது அதிகாலையா அந்தி மாலையா
என்று குழப்பமாகவுள்ளது

அந்த ஓவியனுக்கு எல்லாமே நன்றாகத் தெரியும்
ஆனால், அவன் அந்தப் புறாக்களோடு பறந்துபோய்விட்டானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் ரகசியம்

அவர்கள் வந்து விட்டனர்
நானின்னும் வரவில்லை

அவளும் வந்து விட்டாள்
நானின்னும் வரவில்லை.

ஆனால், அவர்களுடனேயே நானிருந்தேன்

அது ஒரு சிறிய முற்றம்
பிறகு அதை வசதிக்கேற்றவாறு பெருக்கிக்கொண்டோம்
அங்கே ஒரு மரம் முளைத்துப் பழங்களை நிறைத்தது
பூக்களைச் சூடினாள் அவள்
வாசனையை உண்டாக்கினேன் நான்
தோட்டமும் முற்றமுமாகிய அந்த இடத்தில்
ஒரு படகின் வடிவத்தில் அமர்ந்திருந்தோம்

மெல்ல அசைந்தபடி நகர்ந்தன எல்லாம்

எல்லோரும் கூடி
ஒன்றாகவே விருந்துண்டோம்
ஒன்றாகவே சேர்ந்து பாடினோம்.
ஒன்றாகவே ஆடி மகிழ்ந்தோம்
இரவின் ஆழத்துள் சென்று
ஒன்றாகவே கனவுகள் கண்டோம்

அவள் என்னை முத்தமிட்டது மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து நடந்தது

யாருமறியாத அந்த முத்தமே
ரகசியமாகியது இந்த உலகத்தில்

அவள் சென்றுவிட்டாள்
அவர்களும் சென்றுவிட்டனர்

நான் எங்கே செல்வது?

அந்த ரகசியத்தோடு நானிருக்கிறேன்
யாருமறியாததொரு ரகசியமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத வழி

நெருப்பு இத்தனை குளிராக இருக்குமென
நான் நம்பவேயில்லை

மழைகூட நெருப்பைவிடச் சூடாக இருக்குமென
நீங்கள் சொன்னதை நினைக்கிறேன்

இருளில் தடுமாறுகிறது ஒளியென்பதையும்
ஒளியில் விளையாடிக்கொண்டிருக்கும்
இருள் ஒரு குழந்தை என்பதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வரைந்த மஞ்சட்குருவி

இந்தக் கோடை முழுவதும்
மழையை நினைத்துக்கொண்டிருக்கின்றன மரங்கள்

பழங்களுக்கும் தனக்குமுள்ள உறவைப் பற்றி
எழுத வேண்டுமென்று
சொல்லிக்கொண்டிருக்கிறது மஞ்சட்குருவி

மஞ்சட்குருவியைத் தானே வரைந்து
அதற்குப் பழங்களை ஊட்டி விட்டேன் என்கிறது மழை

வெயில் பளிங்குப் பாளங்களாக
எல்லா இடமும் பரவிக்கிடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்

ஒரு மழைத்துளி பறந்து செல்கிறது என்னைக் கடந்து
அது மஞ்சட்குருவியா மழைத்துளியா?
என்று குழப்பத்தின் ஆழத்தில் என்னைத் தள்ளிவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுலகம்

286305

கோடைகாலப் பறவைகளை
உங்களிடம் தருகிறேன்
அவற்றின் சிறகுகளில் மழையென்றால்
நானென்ன செய்ய?

மாரிக்காலப் பறவைகளைத் தருவேன்
அவற்றின் சிறகுகளில் தீயென்றால்
நானேது செய்ய?

மண்ணடுக்கில்
வரலாற்றின் வினோதச் சித்திரங்களின் நடுவே
உறையாத இரத்தத்தோடு
கிடக்கும்
உறங்காத
விழிகளையுடையோரிடம்
மிஞ்சியிருக்கும் சொற்களில்
உங்கள் கதைகளிருந்தால்
நானென்ன செய்ய?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று தொலைத்தவள்

இன்று முழுதும் வீசிக்கொண்டிருக்கும் கடுங்காற்றில்
பொங்குகிறது கடல்

காற்றின் வேகம் கண்ட குதூகலமா
காற்று தூண்டியதன் சிலிர்ப்பா
காற்றலைக்கும் உலைவா?
எதுவோ எதுவோ என்று சொல்லிக்கொண்டே
கரையில் மோதி மோதிச் சிதைகிறது கடல்.

சிதையச் சிதைய மீண்டுமெழுந்து
விளையாடிக்கொண்டிருக்கிறது
களைப்பின்றிச் சலிப்பின்றி

கரையோ கரையாத கரை
கடலோ மீறாக்கடல்
காற்று
இங்குமங்குமாக நிலை கொள்ள முடியாமல் அவதியுறுகிறது
அமைதியற்ற தென்னைகள் சுழன்றாடுகின்றன
தோழி காளி
அவற்றிலேறி ஆடுகிறாள் களித்து

குதூகலித்த காற்று விளையாடிக்கொண்டேயிருக்கிறது
எல்லாவற்றையும் சீண்டிச் சீண்டிச் சீண்டி..

மரங்கள் நிற்க முடியாமல் தவிக்கின்றன
இப்படியே கிடந்து அல்லாடுவதை விட
சிறகை விரியுங்கள்
பறந்து செல்லலாம் என்கின்றன பறவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளின் திசை வழி அறியினும்
தமதிருப்பைக் குலைத்துக் கலைத்தேக
விரும்பா நிலை மரங்களிடம்
இத்தனை நாளும் தம்மடியிருந்த பறவைகளா
இப்படிச் சொல்வது என.

நாலும் அறிந்தவை, நாலிடம் தெரிந்தவை
நம்மைப் போல நட்ட இடத்திலிருந்து
நகர முடியாமல் இருந்திராதவை
என்ற மாண்புக்கு ஏனிந்தக் கேலி...

கணவாய்க்குப் போனவளைக்
காணவில்லை எனக் காற்று தேடுகிறது
காற்று தொலைத்தவளைக்
காற்று தேடுகிறது
தேம்பித்தேம்பித் தேடுகிறது

தேடிப்பாருங்கள் என்று பறவைகளிடம் கேட்டழுகிறது காற்று

15 JUN 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

*01*
எங்கேயென்று தெரியவில்லை
சென்றுகொண்டேயிருக்கிறேன்

செல்லுமிடம் தெரிந்துதான் என்னாகும்?

திரும்பி வருவாயா? என்று யாரும் கேட்கப்போவதில்லை

எந்தக் குரலுமே கேட்காத தொலைவு செல்ல
விடுதலையின் படியில் கால்கள் பதிகின்றன

விண்ணில் முளைக்கிறது சிறகு

*02*
கையிலிருக்கும் மஞ்சள் பையும்
கை விட்டுப்போக
சிறகுகள் முளைத்து விரியும் வெளியில்
சுமையற்ற பறத்தல்
திசையற்ற ஏகல்

*03*
உதிர்ந்த சிறகு
காற்றில் களித்தாடுகிறது தன்பாட்டில்

இனி அதைப் பறவையும் தேடுவதில்லை
அது தன் திசைநோக்கி மிதக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13824 cc

*04*

வானில் காற்றின் வழியில் செல்லும்
ஒற்றைச் சிறகின் அழகு
இவ்வெளியில் வேறேது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபோது தைத்த முள்

தலை சரித்து
ஒழுங்காக வாரிவிடப்பட்ட கூந்தலைக் கோதியபடி
நீ பேசத் தொடங்கியபோது
மெல்லியதாக மழை தூறியது.
கண்களை மூடி மழையைப் பிரார்த்தித்தேன்

தேவதையின் பாடலே மழையின்
இசைக் குறிப்புகள் என்று நினைத்துக்கொண்டிருந்தபோது
தாறுமாறாக இந்த வாழையில் பாய்ந்தன ஆயிரம் கத்திகள்

வானம் இடிந்து
வந்து விழுகின்றன வார்த்தைகள்

புயலடித்த தோட்டமாயிற்று
அந்த நொடி

சட்டென இவ்வளவு பெரிய வெள்ளமா என்று
திடுக்கிட்டெழுவதற்குள்
என்னில் மூண்டது பெருந்தீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் எப்படித் தீயை மூட்டினாய்
என்று புரிந்துகொள்வதற்கு முன்
நமக்கிடையில் வெடித்து விரிந்தன
மாபெரும் வெளியும்
சமனிலையற்ற பரப்பும்

இடையில் அறுந்து தொங்குகிறது
நாமாடுவதற்கான ஊஞ்சல்

கைவிடப்பட்ட பாத்திரத்தில்
திகைத்துறைந்தன இந்தக் கணங்கள்

இனியுன் கதவுகளைத் தட்டும் சங்கடங்களில்லை
அழைக்கும் குரல் கேட்காத் தொலைவுக்குச்
சென்றுவிடுகிறேன்.

வெயிலோ மழையோ
பசியோ தாகமோ எதுவாயினும்
எதுவாயினும்
எதுவேயாகினும்...

ஒருபோது தைத்த முள்
இப்படி முட்காடெனச் சடைக்குமென யார் கண்டார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளை மணி

நீருக்குள் தவளைகள் குதிக்க
எழுகிறது நூறு தொன் மணியொலி
நீரலைகளின் மீது தைலமாய்ப் படரும் இசையில்
காற்று வந்து முத்தமிட்டுச் சொல்கிறது
அருமையான சிம்பனியை இசைக்கும் தவளைக்கு வாழ்த்துகள்

மணியொலிக்க
தேவாலயத்தின் மேலே
பறந்துகொண்டிருக்கின்றன தவளைகள்

பறக்கும் தவளைகளைக் காண்பித்துக்கொண்டிருக்கிறாள்
மரியாள், தன் தோளிருக்கும் யேசு பாலனுக்கு

சிலுவையிலறையப்பட்டபோது
கிறிஸ்துவின் நினைவில் பறந்துகொண்டிருந்தன
அவரன்னை காட்டிய தவளைப் பறவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைத்தெய்வம்

காயும் பயிரின் முகத்தைப் பார்க்க முடியாமல்
உள்ளறையிலேயே கிடக்கும் கடவுளைத் தேடிச் சென்றனர்
சனங்கள்
குடிப்பதற்கே நீரில்லாமல் தவிக்கும்
விதியைப் பார்த்துக் கவலையோடிருக்கிறாள்
ஊடகப் பெண்ணொருத்தி

அவளுடைய கைப்பையிலிருக்கும்
குடிநீர்ப் போத்தலைக் கண்ட கடவுள்
அதில் ஒரு மிடறு நீர் தருமாறு கெஞ்சிக் கேட்கிறார்

நீர்ப் போத்தலைக் கடவுளிடம் கொடுத்தவள் கேட்டாள்
நேற்றிரவு தென்திசையில் வெள்ளத்தில் சிக்குண்டு தவித்தவள்
உங்கள் பெண்ணல்லவா என்று

அவள் கைபற்றிக் காத்தவர் யாரம்மா? என்று கேட்டார் அவர்.
சனங்கள்தானென்றாள்

கடவுளைத் தேடி வந்த கூட்டத்தின் குரல் கேட்டுச்
சட்டென மறைந்தார் கடவுள்

வந்தவர் தாகமிகத் தவித்துக் கேட்டனர்
ஒரு துளி நீர் எங்கேனுமுண்டா என அவளிடம்

மிஞ்சிய நீரைக் கைப்பையிலிருந்தெடுத்தாள்
அதைக் கண்டவர் கையெடுத்துச் சிரம் கூப்பித் தொழுதனர்
நீயே தெய்வம் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைப் பெருமழை

சற்றுமுன் இந்த நகரச் சாலையை
ஆவி பறக்கும் தன் தேநீர்க் கோப்பையுடன்
கடந்து சென்ற நீல நிறப் பெண்
பாதி நடனத்தைச் சிந்தச் சிந்த
தன்னுடலில் எடுத்துப்போவதை
அதிகாலைப் பறத்தலில் கண்டு திகைத்தன
செம்பழுப்புப் பச்சை நிறப் பறவைகள்

சாலையோரத்தில் நிற்கும் காவலரோடு
அவருடைய பணியிடையே
ஒரு நொடியில் நடனமாடி
கூடவே தேனீரையும் சேர்ந்தருந்தினாள் நீலப் பெண்

கழுத்தசைத்து அவளோடு நடனமாடின
ஓரத்துக் கடைகளெல்லாம்

துளித்துளியாகத் தொடங்கிப் பெருகிப் பெய்யத் தொடங்கியது
பறவைப் பெருமழை நீலமாய்

ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பையின் முன்னே
அமர்ந்திருக்கிறோம்

அப்படி இருந்துகொண்டிருப்பது யார் யாரெல்லாம்
என்று பார்த்துச் சொல்லுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் குற்றம்

நாயாற்றில் இரவோடிரவாக வந்து
மீன் வாடிகளை எரித்த கடவுளுக்கு
தண்ணிப்பார்ட்டி வைத்துக் கொண்டிருக்கிறான் நிசாந்த
நிறை வெறியில் புலம்புகிறார்
மன்னிக்கவும் சொல்கிறார்
மன்னிக்கவும் அருள்கிறார் கடவுள்

எல்லாவற்றையும் என்னுடைய பொறுப்பில் விடு நிசாந்த,
கடலையே எரித்துத் தருகிறேன்
உன்னுடைய பெண்களின் முத்தங்களை எனக்குப் பரிசளி என்று.

இப்பொழுது கடவுளையே எரிப்பதற்குத் தயாராகிறான் நிசாந்த
நாளை எல்லோரும் சொல்லக் கூடும்
மீன் வாடியோடு கடவுளும் எரிக்கப்பட்டார் என்று
அதனாலென்ன?
கடவுளும் கருவாடும் ஒன்றுதான்

வரலாற்றுக்கு ருசி எப்போதும் புனைவும் பொய்யுந்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றியெரிந்த உலகில்

அவருடைய ஒரு துளி கண்ணீர்தான் வீழ்ந்தது
வீழ்ந்த கணமே சட்டெனப் பற்றியெரிந்தது உலகம்

நல்லது

இனியொரு புதுயுகம் பிறக்கட்டும் என்றிருந்தேன்
சாம்பலிலிருந்து பழையதாகவே பிறந்தது இந்த உலகமும்

எங்கே அந்த பீனிக்ஸ்?

இந்தத் தடவையும் கடவுள் ஏமாற்றிவிட்டார்

அல்லது நீங்கள் பொய் கூறியுள்ளீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றிய தெய்வம்

கொதிமணலில் கால் வைக்க முடியாமல் தவிக்கும்
அய்யாவின் தோள்களில் கடவுள் இருக்கிறார் பெரும் பாரமாய்

சுடுமணலில் படுவேகமாய் நடந்தோடிச் செல்லும்
ஐயாவின் தோள்களில் கடவுள் இருக்கிறார் சௌகரியமாய்

நெருப்பெனக் கனலும் மணலில்
கால் வைக்க மனம் மறுத்துத் துடிக்கும் ஐயாவின் தோள்களில்
கடவுள் இருக்கிறார் நிஷ்டையில்

முள்ளும் நெருப்பும் கலந்திழைத்த மணல்மீது
கால் பதிக்க முடியாமல் துடிக்கும் ஐயாவின் தோள்மீது
கடவுள் இருக்கிறார் மகிழ்ந்து

கடவுளைச் சுமந்தோடிச் செல்லும் ஐயாவிடம் கேட்டேன்
கொதிமணலில்
ஏனிப்படிக் கடவுளைக் காவிச் செல்ல வேண்டும்? என்று

எனக்குக் கால் சுடும்
கடவுளுக்கோ இதயமல்லவா சுடும் என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது கண் உருவாகிய கதை

அதோ பறந்துகொண்டிருக்கிறது தலை
வானத்திலே மலர்ந்து சிரிக்கிறது சிதை

விழி மட்டும் விலகி
எங்கோ தப்பிச் செல்கிறது

மூன்றாவது கண்
அதோ மலர்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறி

மழையில் காட்டிடையே தவறி விழுந்து
கரைந்து விட்டது ஒரு எழுத்து

ஒரு எழுத்துக் கரைந்து போனதால்
என்னதான் ஆயிற்று என்று நீங்கள் கேட்கலாம்

அந்த ஒரு எழுத்தில்லாமல்
எந்தச் சொல்லும் பொருள் கூட்டுதில்லை
தவிர்த்து முயன்றால்
அது மேலும் கீழுமாக
தவறிக்கொண்டிருக்கிறது
தவறுகளில் உங்களைச் சிக்க வைக்கிறது

என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கும்போது
அந்த எழுத்து முளைத்துப் போகிறது ஒரு குமிழியாக

ஓடிச் சென்று அதை எடுத்தேன்
அது நீங்கள் தந்துவிட்டுப்போன
கடந்த காலத்தின் நிழல்

அதனுள்ளிருந்தது என்றுமே கனியாத முள்ளின் கூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிவு

கழித்தெறியப்பட்ட கடதாசியிலிருந்து பிரித்து
மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள்
காலையில் வேலைக்குப் போன தம்பியை
பைக்கிலே வந்து அவனை மோதிய கருணையாளன்
தன்னை மறைத்தபடியே தப்பிச் சென்றுவிட்டான்

மர்மங்களில் ஒன்றாக
அந்தக் கணத்தில் என்ன செய்வதென்று தெரியாமல்
நடுவழியில் திகைத்துப் போய் நிற்கிறார் நீதி தேவன்

நீதி தேவனின் முகத்தைப் பார்க்க முடியாமல்
கவிழ்ந்த தலையோடு நிற்கிறார்கள்
மோதிச் சென்றவனின் தந்தையும் தாயும்
எல்லோரின் முன்பாக
வீட்டுக்குச் செல்வதா வேலைக்குச் செல்வதா என்று தெரியாமல்
வீதியோரத்தில் கிடக்கின்றன
தம்பியின் மண்வெட்டியும் சைக்கிளும்
அவன் கொண்டு சென்றபோது சிதறிய
சோற்றுப் பார்சலும்

காகங்கள் கரைந்துகொண்டிருக்கின்றன
மருத்துவமனை வளாகத்துக்கு மேலாக
சோற்றுப் பருக்கைகளுக்கு மேலாக
சாலையோரத்தில்
யாருமே பொருட்படுத்தாமல் சிந்திக்கிடக்கும்
குருதிக்கும் சதைத் துண்டுகளுக்கும் மேலாக

நடுங்கும் இதயத்தைப் பொத்தி அமர்கிறேன்
நெருப்பின் மேலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் என்ற இடம்

எதிர்பாராத விதமாக பாவற்கொடிக்கருகில்
அம்மாவின் கனவுகளைக் கண்டெடுத்தேன் இன்று மதியம்

நம் வயிற்றில் வேரோடிப் பரந்த தீராப் பசியின் நிறத்தில்
நெருப்பாக இனித்தன
23 ஆண்டுகளுக்கு முன்னொரு வெள்ளாப்பில்
54 வயதில்

தரையில் வீழ்ந்து சிதறியதந்தத் தாய் நட்சத்திரம்
அன்று உலகின் மலைகள் எல்லாம் உக்கி உதிர்ந்தன

உலகில் அதற்குப் பிறகு மலைகளே இல்லை
இதை நீங்கள் நம்பவில்லை என்றால்
எனக்கென்ன கவலை?
சத்தியமாக எல்லா மலைகளும் மக்கியே விட்டன

அன்று மலைகள் மட்டுமா உக்கின?
நம் கையிலிருந்த
அத்தனை விதைகளும் மலர்களும்கூட உக்கின
நிலம் இடிந்து பாதாளமாகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியா அடுப்போடும்
எரியும் வயிற்றோடும் திணறும்
சிதைக்குத் தீமூட்டித் திரும்புங்கள் என்று
தன்னுடலைத் தானமாகத் தந்த பெருந்தேவியை
எரித்துத் திரும்பியபோது
என்னிலும் மூண்டது தீ
அதில் உருகியவன்
பல்லாண்டுகள் கழித்து அதிசயமாக
இன்று பாவற் கொடிக்கருகில் கண்டெடுத்தது
அன்று உக்கிய மலைகளையே
அன்றுருகிக் கனிந்த கனிகளையே

உயிரை முகர்ந்து பார்க்கிறேன்
பால் மணத்தோடு வளர்ந்துகொண்டிருக்கின்றன மலைகள்

54 வயதுக்கு நான் வந்து சேர்ந்தபோது
எங்கிருந்தோ ஆணிகள் வந்தேறுகின்றன
எனைச் சூழ்ந்திறுகுகின்றன மலைகள்

இந்த நட்சத்திரம்
எக்கணம் வீழ்ந்துதிரும்
எப்போது வெடித்துச்சிதறும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலும்புகளைச் சேகரிப்பவன்

தேடி எலும்புகளைச் சேகரித்துக்கொண்டிருப்பவனைக்
கடந்து செல்கிறேன்
சிந்திய ரத்தத்தை எப்படிச் சேகரமாக்கிட முடியும்?

முடிந்தாலும் யுத்தம்
என்னைப் பின்னிழுத்து வீழ்த்திக்கொண்டேயிருக்கிறது
படை வீரர்கள்
துப்பாக்கிகளையும் படைக்கவசங்களையும்
எங்கோ வைத்துவிட்டு
நெடுஞ்சாலையோரத்தில்
பூஞ்செடிகளுக்கு நீர் வார்த்துக்கொண்டிருக்கிறார்கள்

யுத்தத்தைப் பற்றிய நினைவுகள்
இப்பொழுது அவர்களுக்கிருக்குமா?

பூஞ்செடிகளுக்கு நீரூற்றுவது
வேறொரு பிறவியில் நேரும் சம்பவம் என்று
மனைவியருக்கும் குழந்தைகளுக்கும் சொல்லக்கூடும்
அல்லது ரத்தத்தில் மூழ்கிக் களித்தது
யாரோ என்று அவர்களே நினைத்துக்கொள்ளலாம்

உருமாறிச் செல்லும்
காலத்திடம்தான் எத்தனை
கதைப்பூச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சி?

ஒரு பறவையும் இன்று வானத்தில் இல்லை
பூனைக்குட்டிகள்
முகில்களுக்கிடையில் விளையாடிக் களிக்கின்றன
அவற்றுக்குத் தெரியாமல்
ஒரு பெரிய பாம்பு வானத்தில் ஊர்ந்து செல்கிறது

ஒரு நூலில் இருந்துதான் எல்லாக் கதைகளும் ஆரம்பிக்கின்றன
என்று எழுதிக்கொண்டிருக்கிறார் பரிசுத்த ஆவி

சரித்திரத்துக்கு வரலாற்றைத் தவிர
வேறொரு பெயர் என்ன என்று கேட்கிறது
பனை மரத்தில் உட்கார்ந்திருக்கும் தேன்சிட்டு

இந்தப் பனை மரமே
நாங்கள் கொல்லப்பட்டபோது அருகில் மிஞ்சி நின்ற
ஒரேயொரு சாட்சி

சரி, கொல்லப்பட்ட பிறகு
சாட்சிகளால் யாருக்குத்தான் பயன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ என்ற காட்டுப் பாடல்

மூண்டெரியும் காடு
செத்து மடியும் உயிர்ப்புலம்
மிஞ்சும் சாம்பல்
மிஞ்சாத பசுமை
கரியான மரவுடல்கள்
புகை மூடிய வானம்
வழியற்ற பறவை
நீ

தாமரைக்குளம்
அலைகரை
தோட்டுப்புல்
மீன் கொத்தி
அல்லிப்பூ
நீ

நாகதாளிப் பழம்
காலில் தைத்த முள்
காட்டுக் கத்தி
கண்கொத்திப் பாம்பு
காட்டுமுல்லை வாசம்
நீ

பொன்னொச்சிக் காடு
நெட்டைப் பனை
நன்னாரிக் கொடி
ஓடும் மேகம்
ஆவரசம் பூ
நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றாளைக் காடு
கங்கு வடலி
பங்குக் கிணறு
பாழடைந்த துலாக்கொடி
ஒற்றையடிச் சுவடு
நீ

சேனைக் காடு
சோளக்கொல்லை
காவற் கொட்டில்
வெருளிப் பொம்மை
மயிற்பேடு
நீ

வெள்ளாப்பு
அலரி வாசம்
சங்கொலி
பனிக்கூதல்
மணியோசை
திருவெம்பாவை
நீ

புலர் காலை
ஆற்றோரம்
துள்ளும் விரால்
சிறு புதர்
காடை முட்டை
கானாங் கோழி
நீ

மழைப் பொழுது
விதைப்பெட்டி
உழவு மாடு
மண் மணம்
சால்களில் எழுந்தமரும் வெண் கொக்குப் படை
கனவையும் சேர்த்து விதைக்கும் கை
நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராக்கடல்
குமுறும் அலைகள்
குளிர்
தனித்த படகு
துள்ளும் மீன்
துடிக்கும் மனம்
நீ

காட்டு முல்லைப் பூக்கள்
நிழலூறிய நிலம்
தழுவிப் படரும் கொடிகள்
மிரளும் மான்
குயிலோசை
நீ

பற்றைக்காடு
ஆட்டு மந்தை
ஆட்டோடு
காடலையும் பெண்
மாலைச் சூரியன்
தொலைவில் வீடு
தனித்தொரு குரல்
நீ

பனங்கூடல்
இளவெயில்
சோளகக் காற்று
மீன் வாசம்
பிளாவில் கள்
நீ

மலைக் காடு
அதிலாடும் தேன் கூடு
மழைச்சாரல்
நீரோடும் ஒற்றையடிப் பாதை
தூரத்தேயொலிக்கும் பாட்டு
தீராக் குளிர்
நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த வெளி
வெண் மணல்
வெள்ளி பூத்த இரவு
திறந்த முற்றம்
காதல் பற்றிய பேச்சு
உமையின் கவிதைகள்
நீ

வெண் மணல்
தாழம் பூ
மாலைப் பொழுது
கடல் அலை
ஈரக்காற்று
நீ

குண்டுமணிகள்
முரலிப் பழம்
ஆவரசம் பூ
மான்கொடி
நன்னாரி வேர்
மேழிக்கிழங்கு
மஞ்சட்குருவிக் கூடு
முயற்பழை
மான் கூட்டம்
காட்டு முல்லை மலர்
நீ

மரங்கள் இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றன
அபாய எல்லைகளை அதோ கடந்து செல்கின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனித் தாங்கவே முடியாது என்று

இனித் தாங்கவே முடியாது
யார் நிற்கிறார்கள்
என்னைத் தாங்கிக்கொள்ள?

ஒரு திருவிழாவாக மாறிக்கொண்டிருக்கும் குழந்தைகளை
அழைத்துச் செல்ல வேணும்
எங்காவது.
நீங்கள் இன்னும் வந்து சேரவில்லை
குழந்தைகள் உங்களுக்காகவா எனக்காகவா
காத்திருக்கின்றன என்று தெரியவில்லை

நாட்டின் தலைவரை அழைத்தேன்
அவருடைய மனைவியே தொலை பேசுகிறாள்
தலைவரைப் பற்றி ஒரே புகார்
அவளே புகார்களோடு நிற்கையில்
என்னுடைய புகாரையும் எப்படிச் சொல்ல முடியும் அவளிடம்?

மஞ்சளோடையில்
பழைய கதைகளைப் படித்துச் சிலிர்க்கிறார்கள்
பழைய கதைகளில் எவ்வளவு பொய்களையும் கலக்கலாம்
வரலாற்றுக்கு எப்போதும் பொய்கள் ருசியைச் சேர்க்கும்
உண்மையும் பொய்யும் கலந்ததுதானே சரித்திரம்
என்கிறார் வரலாற்றாசிரியர்

கற்பனையின் சிறகுக்கிடமில்லை புதிய வரலாற்றில்
என்ற விதிமுறையை எழுதினர் நவீன வரலாற்றறிஞர்

இதெல்லாம் ருசிக்காத பண்டம் என்று சினந்துகொண்டு
வெளிநடப்புச் செய்கிறார் மூத்த வரலாற்றாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கப் புரவி

திசைகளும் சூரியனும் சந்திரனும்
எல்லாம் மாறி
இடம் வலம் என்றில்லாமல் அழிகின்றன

எல்லாம் எதற்காக?
இதோ ஏறிச் செல்கிறேன் தங்கப் புரவியில்
நீங்கள் நம்பவில்லையா
இதோ பறந்துகொண்டிருக்கிறேன்
என்னோடு வந்து பாருங்கள்
வானத்தில் எவ்வளவு அழகான காட்சி என்று

கண்ணீருக்குள்ளும் வசவுக்குள்ளும்
நாறிப் புழுத்த ரத்தத்துக்குள்ளும்
எத்தனை காலமாகத்தான் வாழ்ந்துகொண்டிருப்பது?
என்று சலித்துப் போனவரெல்லாம்
வெளியேறி வந்துகொண்டிருக்கிறார்கள் என்னோடு

நம்புங்கள் தோழர்களே!
எது பறக்கும் கணம் என்று தெரிந்துகொண்டால்
அந்தப் பாதையிலெல்லாம்
சிறகுகள் முளைக்கும் தோட்டமிருக்கும்

பற்றியிருக்கும் கைகளை விட்டுவிடுங்கள்
அவரவராகவே சென்று விடலாம்

யார் தாங்குவது
யாரை என்று தெரியவில்லை

தங்கப் புரவி பறந்துகொண்டிருக்கிறது
அதோ தெரிகிறது பழங்கள் நிறைந்த நீர்த் தடாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசைப்பொறி

பொத்துக்கொண்டு வரும் தூக்கத்தை
எப்படித் திசைமாற்றுவதென்று தெரியவில்லை
கண்கள் சொருகித் தலை கவிழ்கிறது
அடுத்த வரி நினைவிலிருந்து சறுகி எங்கோ தொலைகிறது
யாருடன் பேசிக்கொண்டிருக்கிறேன் என்றே தெரியவில்லை
எதுவோ நடந்துகொண்டிருக்கிறது

நாளென்றால் அப்படித்தானே
ஏதாவது நடந்துகொண்டுதானிருக்கும்

சற்றுமுன் என்ன நினைத்தேன்?
என்ன செய்துகொண்டிருந்தேன்?

அடுத்தது என்ன?
எதைச் செய்யப்போகிறேன்?

யாரோ என்னை மறப்பதற்கும்
நினைப்பதற்குமாக
முயன்றுகொண்டிருக்கிறார்கள்
எதையோ நினைப்பதற்கும் மறப்பதற்குமாக
நானும் முயற்சிக்கிறேன்

சென்று வருகிறேன் என்று விடைபெற்றாலும்
ஓரடி நகர முடியவில்லை

அறையப்பட்டிருக்கிறது இந்த உடல்
உங்களுடைய ஆணிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்கள் உருவாக்கிய கடல்

எரிந்து முடிந்தது கடல்
ஒரு துளி நீரும் மிஞ்சவில்லை

அங்கிருந்த மீன்களெல்லாம்
தப்பிச் சென்றன

கடலை விட்டுச் சென்ற மீன்கள் கண்டன
கடலுக்கு வெளியேயான ஒருலகத்தை

அது கடலற்ற உலகாயிருந்தது
கடலே இல்லாமல் வாழும் வாழ்க்கையோடிருக்கும்
ஒவ்வொன்றையும் கண்ட மீன்கள்
அவற்றின் அருகில் சென்று
கடல் இல்லாமல் வாழ்வது எப்படி? என்று கேட்டன அவற்றிடம்

கடலைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?
என்று கேட்டன பதிலுக்கு அவை
எரிந்த கடலை எப்படிக் காட்டுவதென்று தெரியவில்லை
மீன்களுக்கு

கடலின் வாசனைகூட
தங்களின் உடலை விட்டு மறைந்துபோனதே என்றழுதன மீன்கள்

அந்தக் கவலையின் ஊற்றே பெருகிக் கடலாயிற்று
அது மீன்களை மீண்டும் கடலில் மூழ்கடித்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் குவியல்

15 JUN 2022

பிரிந்து செல்லும் பாதையிலே
நிற்கும் வண்டியில்
நினைவுகளின் குவியலை அள்ளி அள்ளி ஏற்றுகிறார்கள்

அந்த வழியில்தான் எல்லாமே நிகழ்ந்தன

தன்னிடம் வந்து போகும் ராசமுத்துவின் பீடிக்குள்
மிளகாய்த்தூளைக் கொட்டிவைத்த அரசேந்திரனை
ராசம்மா துரத்தியடித்ததும்
தேக்கந்தோப்புக் கதிரின்ரை தங்கையை
கோபாலகிருஷ்ணன்
பிள்ளை வயிற்றோடு கைவிட்டுச் சென்றதும்
திருமாவளவனின் கவிதைகளை நீங்கள் மறந்தது போலிருப்பதும்
பதினொரு வயதுப் பிள்ளையை
ரமணியின் இரண்டாவது கணவன் புணர்ந்து சிதைத்ததும்
மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்துவிட்டு
நீங்கள் சந்தோசமாக வந்ததும்
சிறை மீண்டு வந்திருக்கும்
பன்னிரண்டாயிரம் போராளிகளைப் பற்றி
நீங்கள் சிந்திக்காமலே இருப்பதும்
போர்க் குதிரைகளை
ஓய்வில்லாமலே ஓட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று
நீங்களெல்லாம் ஆசைப்படுவதும்
குஞ்சுராசுவின் கள்ளைக் குடிப்பதற்காக
ராகினி வீட்டின் பின்புற ஒற்றையடிப் பாதையில்
பறந்து சென்றதும்
கறுத்தப் பசுவின் கன்றுக் குட்டியை
கயிற்றோடு அவிழ்த்துக் கொண்டுபோனவன்
இறைச்சிக் கடையில் அதை அறுத்து வைத்ததும்
இந்த வழியில் நிகழ்ந்தவையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியங்களை மறப்பது கடினமே

ஆனாலும் சமயங்களில் இந்த வழியிலிருந்து
ரகசியமாக விலகிச்செல்ல முற்படுகிறீர்கள்

உங்களிடத்திலே நிரம்பிக் கிடக்கும் நினைவின் குவியலை
எந்த வண்டியிலேற்றுவதென்று தெரியவில்லை உங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை வெளி

வெள்ளை வெளியில்
வெண் மணல் குவியலின் மேல்
காற்றுடன் விளையாடிக்கொண்டிருக்கிறது
கொவ்வைச் சிறுகொடி

கொவ்வைச் சிறுகொடியை
தன்னோடழைத்துச் செல்ல
முயன்றுகொண்டிருக்கிறது காற்று

அதை விட மாட்டேன் என்று
பிடித்துக்கொண்டேயிருக்கிறது மணல்மேடு

நிலத்தோடும் காற்றோடும்
போராடுகிறதா விளையாடுகிறதா
என்றறிய முடியாமல்
அந்த நடனத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்

நீ என் கைகளைப் பற்றிப் பிடித்ததேன் அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஞ்சியிருக்கும் ஒரேயொரு இசைக் கலைஞன்

மிஞ்சியிருக்கும் ஒரேயொரு இசைக் கலைஞனை
அழைத்து வந்திருக்கிறேன்

உலகத்தின் இறுதி இசையை இன்று நீங்கள் கேட்கப்போகிறீர்கள்
கொஞ்சம் பொறுத்திருங்கள்

அவன் கள்ளருந்திக் கொண்டிருக்கிறான்

அவன் ஒரு பெண்ணாகவோ தேவதையாகவோ
பறவையாகவோ பூவாகவோ குழந்தையாகவோ மாறினால்
அதற்கு நான் பொறுப்பாளியல்ல

கடவுளாகக்கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13824 CC

பறவையின் பயணப் பாதை

வானம் முழுக்க நிரம்பிக் கிடக்கிறது
சற்றுமுன் பறந்து சென்ற பறவையின் பயணப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றம்

அதோ தெரிகிறது வானத்திலே
அந்த ரத்தத் துளி

அதனுடைய முகத்தை உற்றுப்பாருங்கள்
அதிலே உங்கள் நிழலாடுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்

மீண்டும் சந்திப்போம் எனச் சொல்லிச் சென்ற அன்றுதான்
சிலுவையில் அறையப்பட்டார் கிறிஸ்து

அறையப்பட்ட அந்தக் கணத்தில் அவர் நினைத்ததென்ன?
அவரைப் பற்றி நீங்கள் நினைத்ததென்ன?

மரியாளின் துயரம்
முடியவில்லை இன்னும்
அதுவே பகிரப்பட்டது நமதன்னையரின் மடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் - உதிரம் அல்லது மாமலர்

சிந்துகிறது தேன்
அதுவே என் உதிரம்

முத்தமிட்டு
கைகளைக் குலுக்கி விடைபெறுகிறது மாமலர்
அடுத்த கணமே அது சிறகோடெழுந்து
பறந்து
வானிலே கரைந்தது

மூன்றாம் நாள் கண்டேன்
பிறையாகி நின்று கையசைத்தது

பின்னொரு பொழுது கண்டேன்
வானவில்லாகியிருந்தது

நேற்றுப் பெருமழையாகிக் கனிந்தது

இன்று முளையாகிக் கண்திறந்து வாசம் வீசியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக, பகிர்ந்துண்ணும் விருந்துக்கு

இதோ அந்த மின்னல்
என் கையிலே துடித்துக்கொண்டிருக்கிறது இன்னும்

அதைப் பகிர்ந்துண்பதற்கு
நீங்கள் வரவில்லை இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்

நீ வருகிறாய்
நான் போகிறேன்

விடைபெறுதல் இல்லை
வழியனுப்புதலும் இல்லை
காலம் எப்படி நெருப்பாயிற்று?

நான் எரிந்துகொண்டிருக்கிறேன்
நீயும்தான் எரிந்துகொண்டிருக்கிறாய்

நம்மை நாமே எரித்துக்கொண்டிருக்கும் நெருப்பாகினோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் அலை

இன்னும் ஒரு மணி நேரத்தில்
நாங்கள் இந்த இடத்தைவிட்டுச் சென்றுவிடுவோம்

இன்னும் ஒரு மணி நேரத்தில்
எங்களை இந்த இடம் இழந்துவிடும்

எதுவும் நடவாததைப் போலவே
இந்த இடத்தைக்
கடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் எல்லோரும்

எதுவும் நடவாததைப் போல
இந்த இடமும் இருக்கிறது

எதுவும் நடக்காததைப் போலவே
எல்லோரும் இருக்கிறார்கள்

எல்லோரும் கடந்து போன பிறகும்
எல்லாமே நிகழ்ந்த பிறகும்
எதுவும் நடக்காததைப்போலவே இந்த இடமிருக்கிறது

இந்த இடத்தை மறக்க முடியாமலும்
எதுவோ எல்லாம் நடந்த மாதிரியும்
மனதிலே ஒரு கல் அலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு மலர்கள் கூவி அழைக்கின்றன

காட்டு மலர்கள் கூவி அழைக்கின்றன
கடலில் நிலா ஆடிக் களிக்கிறது
வானத்தில் நட்சத்திரங்கள் பூத்துச் சொரிகின்றன
நீ அந்தரத்தில் சுழலுகிறாய்

கைவிடப்பட்ட கொடி காற்றின் வழியே செல்கிறது

கையசைக்கச் சொல்கிறது மனம்
வேண்டாம் என்கிறது அடுத்த கணம்

அன்பின் தாளத்தை நினைவூட்டுகிறது மனம்
வேண்டாம் என்று
தடுமாறித் தவிக்கிறது அதே மனம்

இதுவும் ஒரு நாடகம்தான் என்று
நீயே அறிந்து நீயே சிரிக்கிறாய்

உன் தலையில் இறங்குகிறது ஆகாயம்
என் காலடியில் விரிகிறது பாதாளம்
என் தலையில் இறங்குகிறது ஆகாயம்
உன் காலடியில் விரிகிறது பாதாளம்

அன்பின் வாசல்களை மூடிக் கல்லாகிறாய்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம்

ஒரு விதை எத்தனை கனிகளைத் தருமென்று
அவன் கேட்டபோது வகுப்பறைச் சுவர்கள் அதிர்ந்தன
ஏதோவொரு பாவனையில்
நீங்கள் வெளியே எதையோ பார்த்துக்கொண்டீர்கள்
மனமும் உடலும் உள்ளூரப் பதற
எதுவோ நிகழ்ந்துகொண்டிருப்பதாக ஒரு கனவு
ஆனால், அது நிஜம் என்று வாதிட்டது களம்
கேள்விகளையும் அவற்றுக்கான பதில்களையும்
தர்க்கத்தையும் அதற்கான விளக்கங்களையும்
அறிந்து மதிப்பிடும் சாகஸமும் வல்லமையும் தகர்ந்துதிர
அவனைத் தழுவத் துடித்தது மனம்
விலகி நிற்க வைத்தது
அக்கணம்

நெருக்கத்தின் விதியுடைந்து வளர்ந்த இடைவெளிக்காட்டில்
மூர்க்கமாயெழுந்த விலங்குகள் வெறியோடலைந்து
அவனைத் தேடின
கொல்லவும் முடியாமல் வெல்லவும் முடியாமல்
சேர்ந்தும் கலந்துமிருக்க இயலாமல் தத்தளித்துத் தவிக்கும்
அலைக்கழிப்பில் தோற்று விலகிச் சென்றீர்கள்

காலம் முன்னகர்ந்ததா பின்னகர்ந்ததா
அவனையும் உங்களையும் எதிர்பாராதொரு புள்ளியில்
மீளிணைத்தபோது
நினைவிலொரு குண்டு வெடித்தது

ஒன்று அவன்
மற்றது நீங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகை

முன்னொருபோது, உங்களுடைய வகுப்பறையிலேயே
அவனிருந்தான் என்பது
சடைத்தெழுந்து வியப்பின் பெரும் புதிர்க்காடாகியது

எதிர்பாராமைகள் இப்படித்தான்
ஆச்சரியத்தின் வேரிலிருந்து துளிர்த்தெழும்

எதிர்கொள்ளலின் நெருக்கடிகள் சுற்றி வளைக்க
மீண்டும் பின்னடைந்து
இருளிற் பதுங்க முனைந்து பதறிய மனதை
வெட்கமும் துரோகத்தின் அவமானமும் தின்று முடிக்க
அவனைப் பற்றிய கையில் பூத்தது கனி
அதிலே பிறந்தது அறிவன்பின் ஒளி

ஒளிக்கோளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் இப்போது
அவனுடைய கதையை இப்படியும் சொல்ல முடியும்
என்று தெரிய
அவிழ்கிறது மனம்
விரிகிறது இதழ்
மலர்கிறது நகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சி

முதிரை மரங்களின் மீது படிகிறது முகில்
அங்கேதானிருக்கின்றன மயில்களும்
இனி நிகழ்வது மாபெரும் நடனம்
இதுதான் இந்த நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சி
நாம் கூடிவிட்டோம்

இந்த நிகழ்ச்சி நிகழ்ந்து முடிய
இந்த நூற்றாண்டும் நிறைவடையும்

பிறகு
இன்னொரு யுகம் மலர
இன்னொரு மரத்தில் இன்னொரு முகில்
இன்னொரு மயில் இன்னொரு நடனம்
இன்னொரு கூட்டம்
இன்னொரு நிகழ்ச்சி

அது முடிவுற
இன்னொரு விருட்சத்தில் இன்னொரு காலம் மலர்ந்து
கனியும்
மயிலின் தோகையில்
எழுதிய அத்தனையும்
எப்போதும் அழகுதான் என
இந்தக் காலத்தை
எடுத்துச் செல்ல முற்படுகிறேன்
இன்னொரு காலமாக விரிகிறது
என்ன செய்வது அதை?
ஓ.. எனதருமை முதிரையே
மயிலே முகிலே
என்ன மாயமிது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு

இன்னும் பொழுதடங்கவில்லை
மாடுகள் பட்டியில் சேரவில்லை
கோழிகள் கூடடையவில்லை
மல்லிகை மலர்ந்துகொண்டிருக்கிறது

நீ இன்னும் வரவில்லை!

முப்பதாண்டுகளாய்
ஊற்றி வைத்த தேநீர் ஆறுகிறது
உடலும் மனமும் கொதிக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திக் கூத்து

எரிந்தடங்கியது சிவனின் தலை
சர்ப்பத்தை விலக்கிச் சென்றேன்

ஓடிவந்து என் மடியில் வளைந்தெழுந்தது படத்தோடு
சூலாயுதமும் மண்டையோடும்
அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்தன

எடுத்துச் சேகரித்தேன்

வந்த உமையாள்
உமைத் தேடி வந்தேன் என்றாள்

வடிவழகி என் மடியில் தவழ் என்றேன்

மின்னற் சிரிப்பில்
என்னை மயக்கித் தன்னுடலில் கரைத்தாள்

என்ன ஏதென்ற போதுரைத்தாள்
சக்தியல்லவா நான்!? என்று

சிந்திக்கொண்டிருந்த பிறையொளியில்
உமையின் விழிகளில் வழியும் மதுக்கிறக்கத்தைக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைசுரந்து என் முகம் நனைய
சிவந்து, கறுத்தவள் தன்னை நெகிழ்த்தாள்
பிரவாகித்த நதி
பெருகி அலையிட்டுச் சமுத்திரமாகிற்று

அச்சமுத்திரத்தில் எரிந்த சிவனின் சாம்பலைக் கரைத்து
மூழ்கியெழ
சூலாயுதமும் மண்டையோடுமாக நின்றது சர்ப்பம்
என்னெதிரே

நின்றது உமையா? சிவனா?
கலந்து பிணைந்த சக்தியா?
நானா நீயா நாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஞ்சிய செல்வம்

வெளிதேடிச் சென்ற புதல்வர்
வீடு திரும்பாது விட்டுச் சென்ற தீ
அணையா நெருப்பாகி எரிக்கிறது
அன்னை வயிற்றை

நினைவின் கூர்
இதயத்தைப் பிளந்தெறிய
எழும் பெருந்துயர்ப் பேரழுகையை
எங்கே புதைப்பதென்றறியாமற்
தோற்கிறாள் அன்னை
காலமும் கனவும் தோற்று வீழ்கின்றன
அவள் காலடியில்
புதைசேறும்
தீயுமாகிற்றுச் செல்வமெல்லாம்

தோற்றெரிந்த கனவின் சாம்பலில்
தேடுகிறாள் தேடுகிறாள்
தன்முக மெங்கே என்று
அநாதரவாய்
வான் நோக்கி விரிந்த கைகளில்
வீழ்கிறது கொதிப்பாறாத கண்ணீர்

அதுவே மிஞ்சிய செல்வமாயிற்றின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rainbow!

கலர் கலராக நிற்கும் மரங்களின்கீழே
நிற்கிறது ஒரு வண்ணக் குதிரை
பாருங்கள் அதன் திமிரை
அதுவே தன்னழகென்று
இன்னும் திமிறுகிறது

அதன் எதிரே தெரிகிறது வானவில்
பின்னணியில்,
எரியும் வண்ணத்தில் மலர்கள்
அவற்றின் மீது மெல்ல வந்தமர்கின்றன வெண்சிறகுகள்
என் பிரிய Rainbow!
நீ எத்தனை அழகாக இருக்கிறாய் இந்த உலகில்!!
தன்னைப்போலப் பருவங்களையும் காலங்களையும் கடந்தவள் நீ
என்று சொல்கிறது வானம்
அதை இசைத்துச் செல்கிறது காற்று
வண்ணங்களை நிரப்பிக்கொண்டிருக்கிறது
ஒளிரும் கனவு
நிறங்களாகிக் கொண்டிருக்கிறது இந்த நாள்
அப்படியென்றால் இது Rainbow வின் நாளா?
இல்லையென்றால்
அதனுடைய நிறங்களாலான இசையின் மீது
சிறகடித்துப் பறக்கும் நிறப் பறவையின் நாளா?
சொல் Rainbow!
பறந்துகொண்டிருக்கும் நான்
உன் வண்ணங்களின் மீது அமர்வது எப்போது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிக்காலம்

வீழ்ந்துகொண்டேயிருக்கிறது இந்த நாற்காலியும்
வழிமறித்துச் சொல்வதற்கு
எவரிடமும் எந்தச் சொல்லுமில்லை
தடுத்தாட்கொள்ள
வலிமையற்ற நாட்களில்
நம் குழந்தைகளையும் பந்தயம் வைத்தாடுகிறது
நாங்கள் அனுமதித்த அதிகாரமும்
நிபந்தனையின்றி வளர்த்த மௌனமும்

துக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும்
பெருந்துயரைத் தாங்குதற்குமான
இதயம் இற்றுப்போயிற்று எப்போதோ

காலத்தின் நரம்புகளைப் பிளந்தபடியே
எல்லோருடைய கண்களையும் கைகளையும் மீறி
ஒரு சொட்டுத் தேன்
சிறியதொரு உப்புக் கல்
உக்கிரத்தோடெரியும் தீக்கொழுந்து
சிந்தும் துளி நீர்
ஒரு சிறு புன்னகை
காயாத கண்ணீர்த்துளி
விழுந்துகொண்டேயிருக்கிறது

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டேயிருக்கிறேன்

வீழ்ந்துகொண்டேயிருக்கிறது உன் முகம்
விழுந்துகொண்டேயிருக்கின்றன நமது கரங்கள்
வீழ்ந்துகொண்டேயிருக்கிறது நம் நம்பிக்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும்
விழுந்துகொண்டேயிருக்கிறது அந்த நாற்காலி

உண்ணமுடியாத பழங்கள் கொட்டிக்கிடக்கின்றன
வீதியெங்கும்

பொம்மைகள் உரையாடிக் களைத்த பிறகு
ஒருவரில்லை அவற்றை உறங்க வைப்பதற்கு

அதனாலவை தமக்குத் தெரிந்த மாதிரியே படுத்துறங்குகின்றன
அங்கங்கே

வீழ்ந்துகொண்டேயிருக்கும் கதிரையைக்
கனவிலே நிறுத்திய குழந்தைகள்
நாளை பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றன

அவை சொல்லும் சேதி என்னவாயிருக்கும்
என்று யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதற்கில்லை எதுவும்

நினைப்பதற்கில்லை எதுவும்
பிரிந்து சென்ற ஆறு
திரும்பத் தெரியாமல் வழி கேட்கிறது
அருகே நின்ற மரத்திடம்

மரம் பறவையிடம் வழி கேட்டது
பறவையோ வானத்திடம் நதியை அழைத்துப்போனது
வானத்திற்குச் சென்ற நதி
தன்னுடலைக் காணாமல் தவித்து
திரும்பிச் செல்லும் வழியைக் கேட்டது
பறவையிடம்

பறவையின் நினைவுகளும் அழிய
திரும்பிச் செல்லும் வழி தெரியாமல்
வானத்திலேயே பறந்துகொண்டிருக்கிறது பறவை

தன்னிடம் என்னவெல்லாம் உள்ளதென்று
நினைவில்லை வானத்திற்கு
எங்கே செல்வதென்று தெரியாமல்
அந்தரத்திலேயே நின்றுகொண்டிருக்கிறது வானம்

நினைப்பதற்கில்லை எதுவுமென்று
சிறகுகளால் எழுதிக்கொண்டிருக்கிறது பறவை

பறவையின் சிறகுகளில்
நதி இருக்கக்கூடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னாரி

நன்னாரி வேர்க் குடுவையோடு செல்லும்
ஐயாவைப் பின்தொடர்ந்தேன்
காட்டு வழி

கொவ்வம் பழக்கொடியில் கிளிக்காலம் கண்டு
அதிசயித்த சிறுவனின் கண்களில்
துவரம் பழங்களும் கரும்பைப் பழங்களும் நிறைந்த காடு
கறுப்புச் சிவப்பாய் கனிந்த பெரிய பழம்

விரிந்து சடைத்த முதிரை மரத்தினடியில்
சற்றாற
ஒற்றையடிப் பாதையில்
மான்கூட்டம்
தனித்த முயல்

ஐயாவைப் பின்தொடர்ந்து செல்லும்
என்னுடன்
கூடிக் களித்து வரும் வீமன் மோப்பமிட்ட பொந்தில்
உடும்பின் வால் மறைந்தும் தெரிந்தும் ஆடிய வித்தை
வேட்டையின் முதலடி

விட்டு வாடா வீமா
என்றழைக்கும் ஐயாவின் காலடியை முந்தியோடி
இன்னொரு புதரில் மணமெடுக்கும் வீமனைக் கண்டு
துள்ளிக் குதித்தோடிய முயல்
வேட்டையின் இரண்டாவதடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதரில் நுழைய
வேர்க்கிழங்குகள் தேடி ஐந்தாறு பேர்
காடலைந்தனர் பன்றித்தடங்களில்
பன்றி அகழ்ந்த கிடங்கில் கண்விழிக்கும்
வேர்க்கண்ணிகளைச் சேகரிக்கும்
மூலிகை தேடிகளோடு ஐயாவும் சேர
காடும் வீடும் மூலிகை வாசம்
வேட்டையின் மூன்றாவது அடி

நன்னாரித் தண்ணீரில்
ரத்தம் பெருக்கியவன் பார்த்துக்கொண்டிருக்கிறேன்
கார்ட்டூன்களில் காடலைந்து கொண்டிருக்கிறான் பேரன்
வேட்டை நாய்கள் கலைத்தோடும் மான்கள் திரும்பிப் பேச
கைகொட்டிச் சிரித்தவன்,
வேர்களைத் தேடும் பன்றியைக் கண்டவுடன்
முகம் திருப்பியென்னிடம் கேட்டான்
ஏன் தாத்தா இவன் நிலம் தோண்டுறான்? என்று

மாத்திரைப் போத்தலில் உறங்கும் குழந்தையை
நினைத்தேன்
வேட்டையின் நான்காவது அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்களின் நிழலில் உடைபடும் பகல்

தெருவிளக்கின் ஒளியில் அந்த நிழல் ஆடியது முதலில்
பிறகது அங்கிருந்து வெளியேறி நகரத்திற்குச் சென்றது
அங்கே ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைப் படித்தது
கடைவாசலில் அமர்ந்து சில நிமிடங்கள் சிரித்தது
பிறகு
எதிரும் புதிருமாக வந்துகொண்டிருந்த பேருந்துகளில்
பிரிந்து சென்றது
அப்படியே ஒவ்வொரு பேருந்துகளிலும் பிரிந்து பிரிந்து
எல்லா ஊர்களுக்கும் அது சென்று சேர்ந்தது
எல்லா ஊர்களிலும் நாய்கள்
அந்த நிழல்களைக் கண்டு குரைத்தன

நாளாக நாளாக அந்த நிழல்களுக்கும் நாய்களுக்கும்
சிநேகம் உண்டாயிற்று
பின்னாளில் நாய்கள் வேறு நிழல்கள் வேறு
என்று தெரியாத அளவுக்கு எல்லாமே மாறிவிட்டன
காலம் பொன்னாக உருகி
தெருவிளக்கில் ஒளிர்ந்துகொண்டிருந்தபோது
நாய்களுடன் கூட நின்ற நிழல்
எதேச்சையாக இதைக் கண்டது

உப்புக் கரைந்து நாக்கில் வடிய வடிய
தெருவின் வழியே தெருவிளக்கை நாடியோடிய நிழல்
இன்னும் வந்து சேரவில்லை அதன் அருகில்

நாய் ஒன்று நிழலுக்கு மூத்திரம் அடித்துவிட்டுத்
தெருவிளக்கைப் பார்த்துச் சிரித்தது

அந்தச் சிரிப்பு எல்லா ஊர்களிலும்
குரைப்பொலியாக இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறது

இரவுகள் இப்படித்தான் உடைபட்டுக்கொண்டிருக்கின்றன
பகலுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

திட்டக் கூர்மையை அவளிடமிருந்தே பெற்றேன். தினமும் தன்னுடலையும் மனதையும் இயக்கி, அதிகாலைக்கும் நள்ளிரவுக்குமிடைப் பொழுதை நிறைத்து கொண்டிருப்பவள் ஒழுங்கற்றுச் சிதைந்திருந்த காலத்தை நிரற்படுத்தி, அதற்கு நீரூற்றினாள்

காலமொரு தோட்டமாக வளர்ந்தது

சிறகுகளைப் பொருத்தி, காற்றின் விசையோடு சமனிலைப்படுத்தி இயக்கிய பின், வந்தமர்ந்தாள். இருவருமாகச் சேர்ந்திருந்து தேநீர் பருகினோம்

இப்போது காலம் எங்கெல்லாமோ சுற்றிப் பறந்துகொண்டிருக்கும் என்று நினைத்தபடி அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னைப் பிசைந்து விளைச்சல் நிலமாக்கினாள். நெருப்பின் ஈரத்தை எடுத்து ஊன்றி, பயிர்களை வளர்த்தாள்

அலைகளின் இயக்கத்தை உண்டாக்கி எல்லாவற்றையும் கரைத்துக் கடலாக்கிய பின் தன்னைப் படகாக்கினாள். அது செல்லும் திசையில் தன்னை வளைத்து விசையாக்கியவள் நீர் மீதிருந்து உன்னியெழுந்து பறந்தாள்

காலமொரு விசையெனக் காணத் திறந்தேன் அதை
உதிரமாகத் தளும்பிக்கொண்டிருந்தாள்
அந்த உதிரத்தில்தான் என்னுடைய முகமும் உன்னுடைய முகமும் இந்த உலகத்தின் முகமும் தெரிந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடியில் மரம் பார்த்துக்கொண்டிருக்கிறது

மரத்தின் நடனத்தைக் கண்ணாடி நிகழ்த்திக் காட்டும்போது மரத்துக்கு உண்மையிலேயே ஆச்சரியமாகி விட்டது. பறவைகளை அழைத்துப் பாடியது. ஆனந்தத்தில் மரத்தின் பாடலைக் கேட்ட பறவைகள் சேர்ந்தாடின

மரத்தில் பறவைகள் வந்தமரும் காட்சியைக் கண்டதும் நெகிழ்ந்தது மரம். மரம் பார்த்துக்கொண்டேயிருந்தது. பறவைகள் மரத்தோடு கொண்டாடும் களிப்பைப் பறவைகளுக்கும் அணிலுக்கும் கனிகளைக் கொடுத்துக் கனியும் தாய்மையை

பழங்களோடு நின்ற மரத்தைக் கண்டபோதுண்டான மகிழ்ச்சி மரத்தை மலர்த்தியது பூக்களாக. பூக்களாகவே தான் விரிந்திருப்பதைக் கண்ட மரம் மகிழ்ச்சியில் சிறகை விரிக்க பறவைகளும் மரமும் ஒன்றாகிப் பறந்தது காற்றில் மிதந்தது

இப்போது கண்ணாடியில் தெரிவது மரத்திற்கு நீங்கள் மூத்திரமடித்த காட்சி மட்டுமே. அங்கே உதிர்ந்த வெட்கம் திறந்து நிர்வாணம் வெளிப்படுத்திய உங்கள் குறியில் மரம் போன்றதொரு நிழல் ஆடியது. உற்றுக் கவனிக்க, மரத்திலிருந்து தலைநீட்டியபடி முன்னகர்ந்த பாம்பின் நாக்கு நீண்டது

கண்ணாடியில் இந்தக் காட்சியே உறைந்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளில்தான் எதிர்பாராதவை நிகழ்ந்தன

அவள் தன்னுடைய இறுதிக் கவிதையை எழுதினாள்
கிறிஸ்து சிலுவையிலேற்றப்பட்டார்
நாங்கள் வீட்டை இழந்து சென்றோம்
பால்ய நண்பனின் நட்பு முறிந்தது
மண்சரிந்து 68 குடும்பங்கள் மண்ணில் புதையுண்டன
அடகுக் கடையிலிருந்து மீட்டுக்கொண்டு வந்த நகை
அம்மாவின் கையிலிருந்து தவறியது
விபத்தில் சண்முகம் கையை இழந்தான்
நாட்டின் தலைவர் சிறையிலடைக்கப்பட்டார்
அவள் என்னைப் படமெடுத்தாள்
இனி என்றென்றைக்கும் ஏற்றப்பட முடியாதென்றொரு
கொடி மாறியது
புத்தர் மறுபடியும் நிர்வாணமடைந்தார்
வானத்தில் பறவைகளோடு விமானங்களும் இணைந்து
கொண்டன
பூவரசம் இலைகளில் குழலூதுவதை எல்லோரும் கைவிட்டனர்
தற்கொலைக்குப் பதிலாக வாழலாம்
வாழ்க்கையே தற்கொலைதான் என்று அறிவிக்கப்பட்டது
கப்பல்களைச் சுமப்பதே கடலின் விதியென்றானது
விளையாட்டரங்கில் அணுவாயுதங்கள் இயக்கப்பட்டன
வழியில் தெரிந்தவள் மின்னலாய் மறைந்தாள்
தினந்தோறும் வேளை தவறாமல்
மாத்திரைகளைப் பாம்பு விழுங்கியது
இனி வயலுக்குப் போவதில்லை என்றார் ஐயா
தானும் கவிதைகளுமாகவே எரிந்து முடிந்தாள் சிவரமணி
எவ்வளவு அழகிய பயணம் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள் கடல் வந்து
சனங்களை அவர்களுடைய கனவுகளோடும் துயரங்களோடும்
அள்ளிச் சென்றது
சற்றைக்குள் பல்லி மிட்டாய்க் கடை காணாமல் போனது
முள்முருங்கைகள் வேலிகளை விட்டு நீங்கின
துறைமுகங்களை மறந்தனர் மாலுமிகள்
விமானங்களில்லாத வானமுமில்லை
கப்பல் இல்லாத கடலுமில்லை என்றானது
உலகம் உருகித் திரவமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரப்பூ

அடுக்கு வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லும்
அந்த மனிதரை
சந்திப்பதற்காக யாரும் வரவில்லை
அவர் காத்துக்கொண்டேயிருக்கிறார்

காலமும் காத்துக்கொண்டிருக்கிறது
சந்திப்பதற்காக எதிர்பார்க்கும் யாரோவுக்காக

படிகள் இன்னும் வெறுமையாகவே உள்ளன
சுவடுகள் உதிர்ந்து வெகுநாட்களாயிற்று
அவற்றின் மணமும் கரைந்து
மண்ணடியில் தொலைவு கண்டது

அந்தத் தெருவழியே தினமும் சென்றுகொண்டிருக்கும்
தபால் வண்டியில்
அவருடைய சேதிகள் அங்குமிங்குமாக அலைகின்றன

அறியாத ரகசியங்கள்
தெருக்களில் சிதறிக்கிடக்கின்றன
பூனை ஒன்று அதை மோப்பம் பிடிக்க முனைகையில்
அந்த ரகசியங்கள் ரகசியப் பெட்டிக்குள்
ஓடி மறைந்துகொள்கின்றன

அவருக்கும் தெரியாது யாருக்கும் தெரியாது
சிதறிக்கிடக்கும் பொன்னிறக் கண்களை உடைய ரகசியங்களை
ஒரு பைத்தியக்காரி எடுத்துச் சேமிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் சிரிப்பும் அழுகையும் சேர்ந்து
அந்த ரகசியங்களை மேலும் ஒளியூட்டும்போதுதான்
அந்தச் சம்பவம் நடந்தது

அவர் வெளியேறிச் சென்றதும் உள்ளே
நுழைந்ததும் ஒரே கணத்தில் நிகழ்ந்தது

அவரை முத்தமிடும் யாரோ
காத்திருக்கும் வெளிக்கு அப்பால்
நட்சத்திரங்களை எடுத்து வயலில் நட்டுக்கொண்டிருக்க
மறுபாதிச் சக்கரம் உருண்டோடி
அந்தரத்தில் நின்றது

இன்னும் யாரும் வரவில்லை என்று
அடுக்கு வீட்டின் படிக்கட்டில்
ரகசியப் பெட்டி தன் சுவட்டை
மறைத்துக் காத்திருக்கிறது.

ஆமாம்,
அவர் வெளியேறிச் சென்றதும் உள்ளே
நுழைந்ததும் ஒரே கணத்தில் நிகழ்ந்தது
காலடிச் சுவடுகளும் பகிரப்பட்ட முத்தமும்
அந்தரத்தில் உறைந்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மை

தாளமொன்று கேட்கப் பாம்பாக நெளிந்துகொண்டிருந்தது
பிறகு துள்ளிக் குதித்துப் பறந்து வானவில்லாகியது

இசை வண்ணமயமாகிய வானத்தில்
பாம்பு சிரித்துச் சிரித்து நடனமாடியது

தாளமென்றால் அப்படியொரு தாளம்
ஆட்டமென்றால் அப்படியொரு ஆட்டம்

நதிபெருக்கெடுத்தோட மேகக் கூட்டமெங்கும்
மலைக்காட்டுக் காட்சி
வெள்ளிகள் குளித்துக் களித்தன அந்தர நதியில்

நூலில் ஏறி ஆற்றிலே இறங்கினேன்
பாம்பின் மடியில் என்னை வைத்து விளையாடக் கேட்கிறது
ஒரு நட்சத்திரக் குழந்தை

பொம்மையென்றால் விளையாட்டாகத்தானிருக்கும்
என்பது எத்தனை உண்மை
என்பதைச் சொல்லியா தெரிய வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் காட்சி

வெள்ளை நிறத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன்

கொக்கிலல்ல, பாலிலும் அல்ல
வெண்கட்டியிலோ புடவையிலோ பறவைகளின் முட்டையிலோ
மூத்தம்மாவின் நரைத்த முடியிலோ அல்ல

தாளத்தில், அதன் நாதத்தில்
பாம்பாக நெளியும் கனவின் மேனியில்தான் அதைக் கண்டேன்

அந்த வெள்ளை மெல்லக் கரைந்து இலைகளாகியது
இலைகள் உதிர்ந்து நிலம் வெள்ளையாகியது
உதிர்ந்த இலைகள் பறந்து
வானம் வெள்ளையாகியது
வெளியும்
கடலும் வெள்ளையாகியது
சாலைகள் வெள்ளையாகின
ஆடும் மாடும் காடும் மலையும் மலமும் நாயும்
காட்டு விலங்குகளனைத்தும் தீயும் நதியும் இரவும்
குழந்தைகளும் பெரியவர்களும்
வெள்ளையாகிட
திசைகளும் காலமும் வெள்ளையென்றானது

நான் இப்பொழுது கறுப்பைப் பார்க்கத் தொடங்கினேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு

இரவு
அந்தச் சிவப்பு நிற வண்டியில் அவளைக் கண்டேன்
என்று வந்த குறுஞ்செய்தி
தீயை மூட்டிக் கொண்டேயிருக்கிறது.

அப்படித்தான்
நீண்ட வருடங்களுக்குப் பிறகு
அவள் அனுப்பிய மூன்று ஒளிப்படங்களும்
நெருப்பாய் எரிகின்றன.

நீ
சிவப்புத்தான்
நெருப்புத்தான்
உன் வழியும் திசையும் செம்மஞ்சள் பூக்கள்தான்
என்று அவளை எழுதிய பதிகமும்
அதிலே சூடி வைத்த நினைவுகளின் பேரேடும்
அனலாகித் தகிக்கின்றன

ஒரு நெடுங்கால உறவு
சிவப்பாகவும் நெருப்பாகவுமே
எரிந்து கொண்டேயிருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையற்காரனின் கையில் கிடைத்த தோட்டம்

காலையில்
முட்டைக்கோவாச் செடிகள் நெருப்பாகி
தோட்டத்தை வேகவைத்துக் கொண்டிருந்தன
பால் வெண்டிகள் வாட்டி வத்தலாக்கப்பட்டிருந்தன
தண்ணீர் பாயும் வாய்க்காலில்
மாலைச் சூரியன் படுத்துக் கிடந்து இளைப்பாறியதைக் கண்டு
கத்தரிப் பூக்கள் பறந்து திரிந்தன மகிழ்ச்சியில்

அப்பொழுது
பாடசாலை மைதானத்தில்
தன்பாட்டில் உருண்டோடி விளையாடிக்கொண்டிருந்தது பந்து
அந்த வெளியில் ஆட்களற்றுப் போனபின்னும்
மிஞ்சிக் கிடந்த ஆரவாரமும் சத்தங்களும்
உருண்டோடும் பந்தின் வேடிக்கையில் குதூகலித்தன

சமையற்காரனின் கையில் கிடைத்த தோட்டம்
இப்பொழுது ஒரு மாபெரும் கறிச்சட்டியாகிக் கிடந்தது

ஆற்றிலே படுத்துக் கிடந்த சூரியனைத்
தூக்கிப் பறந்துகொண்டிருக்கின்றன கத்தரிப் பூக்கள்
கத்தரிப் பூக்களைக் கண்டு துள்ளிக் குதித்தது பந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளி உதிரம்

ஒரு உதிரத்துளிதான் எல்லாவற்றையும் திறந்தது

அப்போதுதான்
நற்கருணையின் கீழ்ப்படிந்திருந்த
குரோதத்தின் பாசாங்குக் கண்களைக் கண்டேன்

எல்லோரையும் அழைத்து வந்து
பலிபீடத்தில் வைத்த உதிரத்துளி
ஒளியாகிச் சுடர்ந்து
எல்லாவற்றின் மீதிருந்த இருளையும் நீக்க
எப்போதுமே திறக்கப்படாதிருந்த ரகசியங்கள்
மெல்லத் திறந்து
ஒவ்வொன்றாக வெளிப்பட்டன

கொலைகளும் பழிகளும்
அன்பும் அன்பின்மையும்
பகையும்
துரோகமும் விசுவாசமும்
உதிரம்பட்டுக் கனல
நடுங்கும் கரங்களால் தாங்கினேன் என்னுடலை

எல்லாம் முடிய
அவ்வுதிரத்துளி
சிறகெடுத்துப் பறந்து வட்டமிட்டது
பிறகு வேர்கொண்டு மண்ணில் இறங்கி
உதிரச் செடியாகிப் பெருத்து விருட்சமாகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்
ஒவ்வொரு இலையும் இரத்தத்திலானது
ஒவ்வொரு மலரும் இரத்தத்தில் மலர்ந்தது
ஒவ்வொரு காயும் இரத்தத்தில் கனிந்தது

ஆச்சரியந்தான்
பறந்து வந்து மரத்திலமர்ந்த பட்சிகளும்
அவை கட்டிய கூடும் இரத்தத்திலானதே

அன்று
வானமும்
அதன் கீழிருந்த கடலும்
பெய்துகொண்டிருந்த மழையும்
இரத்தமாகித்தானிருந்தது

ஒருதுளி உதிரந்தான்
இரத்தமாகிய எல்லாவற்றையும் திறந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 JUN 2022

## வாள்

போதும், ஒவ்வொரு சொல்லும்
முள்ளில் உருக்கிச் செய்தது என்பதை அறிந்தேன்
மலத்தில் படைக்கப்பட்ட அமுதத்தை
தின்ன வரமளிக்கப்பட்டவன்
உங்களின் முன்னமர்ந்து
நெருப்பினாலான கேள்விகளைச் சிலையென எழுப்புவது
வரலாற்றுத் துரோகம் என்றறிவேன்
என்றாலும்
ஒரு துரோகி வரலாற்றுக்கும் தேவையல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் முடியாது என்றபின்

அடங்க மறுத்துத் திமிறும் நாக்கை
அடக்கிக் களைத்துவிட்டேன்
இனியும் முடியாது என்றபின்
அதை
அதன் வழியில் திமிறவிட்டேன்
அடங்க மறுத்துத் திமிறும் நாக்கை
விரட்டினீர்கள் பொய்களின் சவக்கால்
அதுவோ
மறுகித் திரும்பித் தாக்குகின்றது
உண்மையின் கூர்வாளினால்

நானென்ன செய்ய
அக்கணத்தில் நீவிர் பட்ட காயத்திற்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாத் தொலைவு

கைவிடப்பட்ட இசையை வைத்திருக்கிறேன்
இந்த இரவுத் துணையாக

கைவிடாமல் உன்னோடிருக்கிறேன் என்று சொன்ன
இசையின் குரல் உடைந்து
சிதைந்தபோது பார்த்தேன்
கோடி துகள்களாலான
சிதறல்களை

ஒவ்வொரு சிதைவிலும் ஒவ்வொரு முகம்
ஒவ்வொரு முகத்திலும்
இசையின் அகக்கோலங்கள்

எல்லாவற்றிலும்
விட்டுச்சென்ற இசைஞரின் வழித்தடங்கள்
அங்குமிங்குமாகக் கிடந்தன
பிரபஞ்ச நாதத்தை மீட்டியபடி

இந்த இரவில் எவ்வளது தூரம் பயணித்தேன்
என்று கேட்கிறாய்

அந்தரத்தில் மிதப்பவன் அறிவதில்லை தூரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழல்

துளிக்கும் மழை இன்னும் தீரவில்லை

குளிர்ந்து நெகிழ்ந்த நிலத்தின் கீழ்
தடைசெய்யப்பட்ட பாடல்களை அடுக்கி வைத்திருக்கிறேன்
அதன் கீழ்
அழியும் நிழற்படத்தைப் பாதுகாக்கத் தவிக்கிறேன்
காயங்களுடைய இதயத்தின் வலி
இரவில் நிரம்புகிறது

போகட்டும்
மழையோடும் மண்ணோடும் எல்லாம் கரைந்து

பின்னொரு நாளில் அல்லது மறுகணமே
எல்லாம் உயிர்த்தெழும்

சிலுவைக்களிக்கப்பட்ட பரிசு
சிறகும்
வேர்களும் வானமுமுடையது
மூன்றாம் நாளிலல்ல
எக்கணத்திலும் உயிர்த்தெழும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுதறியாமல் எழுதிய நாட்குறிப்பு

அது ஒரு நடுப்பகல்
ஆனால் அப்பொழுதுதான் சூரியன் உதித்துக்கொண்டிருந்தது

கடலிலிருந்து துள்ளித் துள்ளி வந்துகொண்டிருந்த
மீன்களிடம் வழி கேட்டான் நண்பன்
ஒரு மீன் சிரித்தது
இன்னொன்று நகரத்துக்கு வழியா கடலுக்கு வழியா என்று
கேட்டது.

மீன்களின் பேச்சொலியைக் கேட்ட நாய்கள்
ஓடி வந்து அங்கே கூடின
அது ஒரு நடன நிகழ்வாக மாறியிருந்ததை அப்பொழுது
கவனித்தேன்

இரவு முழுதும் உறங்காச் சூரியன் எங்களோடிருந்தது
கடலின் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்த மீன்களிடம்
சமுத்திர வழிகளை அறியத் துடித்துக்கொண்டிருந்தது இரவு

நாங்கள் அதிகாலையில் விடைபெற்ற பொழுது
மாலை மங்கி, நிலவெழுந்தது

எல்லா நிகழ்ச்சிகளும் நடந்தது
எந்தப் பொழுதில் என்று தெரியாமல்
அன்றைய நாட்குறிப்பை
நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்த பகலில் எழுதினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ந்துகொண்டிருந்த பயணம்

அது எல்லோருக்கும் தெரிந்ததுதான்
உடைந்த பாலம் சிறகெடுத்துப் பறந்து விட்டது என்று

நிகழ்ந்துகொண்டிருந்த பயணம்
முடிவுறாமலே பாலத்தோடு பறந்தது என்பதும்

மழை பெய்து இரவைக் கரைத்தது
வெயில் எரித்து பகலைக் காயவைத்தது

செண்பகத்தின் கண்களில் மூண்ட நெருப்பில்
வாழைத் தோட்டங்கள் எரிந்தடங்க
அந்த வழியே ஒரு மந்தை நடந்து போகிறது

மேய்ப்பன் வரவில்லை

கொண்டல் மலர்களைச் சூடிக்கொண்டு போகும்
பூசாரியை
வழிமறித்து நிற்பது உடைந்து சிறகெடுத்துப்
பறந்துபோன பாலமா
ஓடிக்கொண்டிருக்கும் நதியா
என்று சிந்திப்பதற்கிடையில்
ஒரு கலவரம் மந்தைக் கூட்டத்தில் நிகழ்ந்தது

முற்றிய நெல்மணிகளின் மணத்தில்
கிறங்கிய பாலம் மெல்ல இறங்கி வந்து
மந்தைகளின் அருகில் உறங்கியது

முத்தப் பரிமாற்றம் நிகழ்ந்து முடிய
மந்திரக் கோல்களை மணந்துகொண்டிருந்தன மந்தைகள்

வழி தவறிச் சென்றுகொண்டிருந்த பூசாரியைப் பற்றி
பாலமும் மந்தைகளும் பேசிக்கொண்டிருந்தன
பின்னணியில் கேட்பது யாருடைய சிரிப்பொலி?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிப்பச்சை

இரவு உடைந்து சிதறிக் கிடந்ததைக் கண்டு
அவள் கலங்கினாள்
பொன்னின் நிறத்தை ஒத்த அந்த இரவு
அவளுடைய நினைவுகளைச் சிவப்பாக்கிக்கொண்டிருந்தது

அந்தச் சிவப்பு இனித்தது
அந்த இனிப்பு
இப்படித் துண்டாகிக் கிடந்தது வெளிச்சத்தில்

உடைந்து சிதறிக் கிடந்த இரவை
ஒட்டிச் சீர் செய்து தரும்படி
அவள் தன்னுடைய காதலனிடம் கெஞ்சிக்கொண்டிருந்தாள்
அவன் பகலின் மீது தன்னைக் காய வைத்திருப்பதிலேயே
அக்கறையாக இருந்தான்

அந்த நேரத்தில்தான்
என்னை அழைத்துச் சென்றது அங்கிருந்த ஒரு சிறிய மலர்
அந்த மலரின் அருகில்தான்
நானும் அவளும் அந்த இரவைச் சீர்ப்படுத்திக்கொண்டிருந்தோம்

மறுநாள் ஒரு பொன்னிறப் பகல் உருவாகியிருந்தது
இரவு பச்சை நிறத்தில் பறந்துகொண்டிருந்தது
ஆமாம் கிளிப்பச்சை நிறத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சரித்திரக் குறிப்பு

ஒரு மயிலிறகு நடனமாடி
மயிலின் அழகைக் காண்பித்துக் கொண்டிருக்கும்போதுதான்
பாம்பின் நினைவு மயிலிறகுக்கு வந்தது

உடனே அது பாம்பு நடனமாடியது

அந்தக் கணத்திலிருந்து
அது பாம்பாகிவிட்டதென்று
எழுதப்பட்ட சரித்திரக் குறிப்புகளை
வரலாற்று மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள்

அப்படிப் படித்துக் கொண்டிருக்கும்போதுதான்
பாம்பொன்று
மயிலின் அசைவோடு நடனமாடியது

அந்தக் கணத்திலிருந்து அது மயிலாகிவிட்டதென்று
எழுதப்பட்ட சரித்திரக் குறிப்புகளை
வரலாற்று மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கால மாலை

மழைக்கால மாலை
வேளையோடு இருள் கட்டியபோது
அவள் ஓடி வந்தாள்

மழை தூறிக்கொண்டேயிருந்தது
இன்னும் நான்கு அடிகள் மட்டுமேயிருந்தன
அதற்கிடையில்
அவளை நனையவிட்டுப் புறப்பட்டது பஸ்
அந்த நான்கு அடிகள் தன்னை
இருளுக்குள்ளும் மழைக்குள்ளும் தனித்திருக்க வைத்ததையிட்டுக்
கொதித்தாள்

அப்போது அவளுக்கு முன்னே
ஒரு கப்பல் மழையில் முளைத்து அவளிடம் வந்தது
அது தன்னுடைய சிறகுகளை அசைத்து
அவளை அழைத்தது
அவள் அதிலே ஏறிச் சென்றாள்
அவளோடு மழையும் இருளும்
கூடவே அங்கே நின்ற மரமும் வந்துகொண்டிருந்தன

வழி நெடுகவும்
யாரோ பாடிக்கொண்டிருந்தார்கள்

அவள் வீட்டுக்கருகில் இறங்கியபோது
வானம் அவளுடைய உச்சியில்
முத்தமிட்டுக் களித்தது
அவள் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறாள்
பஸ்சுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் ரத்தம்

அறையப்படாத சிலுவையில்
விடுதலையுமின்றிப் பலியிடலுமின்றி
உறையவைக்கப்பட்ட ரத்தமாக்கப்பட்டேன்

கைவிடப்பட்ட கடவுள்
மூலையில் கிடந்துழல்கின்றார்
தூக்கமின்மையை
ஒரு பெரிய மூட்டையாக் கட்டிக் கொண்டுவந்து
அதனோடு மல்லுக் கட்டிக்கொண்டிருக்கிறார்
இங்கே வந்த நாள் முதலாய்...

அவருக்கும் தெரியவில்லை
வந்த வழியும் வெளியேறிச் செல்லும் வழியும்
இப்போது ஒரு சிலுவையை
இருவருமாகப் பங்குபோட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை நமக்கு
ஆனாலும் கடவுளுக்கு அதிலே விருப்பில்லை

அவர் யுகங்களைக் கடந்து செல்ல விரும்புகிறார் இப்படியே
நான் யுகங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர விரும்புகிறேன் இக்கணத்திலேயே

“பசியும் தாகமும் என்னைக் கொல்கிறது
நோவும் வலியும் பிரிவும் துயரும் அழுகி நாறிய விதியாகிற்று”
என்கிறார் கடவுள் சலித்து.
“அதுவே உமக்கு விதிக்கப்பட்ட தண்டனை” என்கிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உனக்கு விதிக்கப்பட்ட தண்டனையே நான்” என்றார் கடவுள் உரத்த குரலில்.

நிமிர்ந்து பார்த்தேன்
எதிரிலே மாபெரும் சூலமாக எழுந்து நின்றார்
பிறகு சிலுவையாகி என்னைக் கை நீட்டி அழைத்தார்

அப்படியே பெரியதொரு மரமாகி வளர்ந்தேன்

வளர்ந்து வளர்ந்து
வான்வெளியில் கரைந்தேன்
எதுவுமற்று
எதுவுமேயற்று...

அப்போதும் கூடவே வந்தது
அந்த ரத்தவாடை
அது கடவுளின் ரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தளிப்பு

இன்று காலையைத் திறந்துகொண்டு வந்தவள்
என் முன்னே நின்றாள்
எந்த வார்த்தைகளும் அவளிடமில்லை
மௌனத்தின் முன்னே
எத்தனை கணம்தான் இருவர் நிற்க முடியும்?

சொல் என்ற ஒற்றைச் சொல்லினால்
அவளைத் திறக்க முயன்றேன்.

மெல்ல இறங்கினாள்
நினைவின் பாதாளத்துள்
தொடர
இருண்ட பாதாளத்தின் அடியில்
காயாத குருதி நெடி
படிக்கட்டுகளில்
அலையடங்காக் கண்ணீர்ச் சூடு
திரும்புமிடமெங்கும் விசும்பும் ஒலிக் கூவல்
சிதைந்த முகங்களின் ஏக்கப் பார்வை முள்
கால்கள் இடறுபடக் கவனித்தேன்
துண்டாகிய கரங்கள், சிதம்பிய முகக்கூர்
விழிமூடாத் துயரம் பெருகி அனலாகி
வானெழுந்து நிற்க

வருகிறேன் என்று சொல்லவும்
செல்கிறேன் என்று விடைபெறவும்
முடியாத தத்தளிப்பில்
தடுக்கி விழுகிறேன்
கண்ணீர்க் குருதியில்

அவளோ சலனமற்று உறைகிறாள்
காலத்திரை அசைந்தாடுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைந்த நிழல்

மூன்று நாட்களாக அந்த நிழல்
அப்படியே அசையாமல் கிடக்கிறது
இரவும் பகலும் வந்து போகின்றன
நிழல் அசையவேயில்லை

தெருவில் ஓடிவந்த நாய்
ஒரு கணம் நின்று
நிழலை முகர்ந்து பார்த்து
மோப்பம் பிடித்தது
ஏனோ தெரியவில்லை
இரண்டடி பின்னே நகர்ந்து
தலையை உயர்த்தி வானோக்கிக் குரைத்தது
பிறகு, நிழலை நெருங்கி முத்தமிட்டு நக்கியது

கரைந்து நெகிழ்ந்த நிழலிலிருந்து
மெல்லியதொரு நறுமணம் எழுந்து
எங்கும் சூழ்ந்தது

சற்றுநேரத்தில்
நிழலைச் சுற்றிப் பெருங்கூட்டம் கூடிப் பெருகியது
கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத காவலர்கள்
நிழலை அகற்றுவதற்கு
முயன்றனர்

நிழலை விலக்குவதைப் பற்றி ஆலோசனை நடந்தது
ஒளியூட்டுவதன் மூலம்
நிழலை அகற்றலாம் என்றார் தலைமைக் காவலர்
இருளைப் பெருக்கி நிழலை மறைக்கலாம் என்றுரைத்தார்
இன்னொரு அதிகாரி
ஆனாலும் நிழல் விலகாமல் ஒளிர்ந்துகொண்டேயிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதறியாது திகைத்த அரசு
நிழலை அகழ்ந்து புதைக்குமாறு ஆணையிட்டது

அடுத்த கணமே நிழலைச் சுற்றி
அகழ்வுப் பணிகள்
ஆரம்பமாகின

நிழல் அசையவேயில்லை
மேலும் மேலும் ஆழ அகழ்ந்தன இயந்திரங்கள்
அப்பொழுது நிழலின் அடியிலிருந்து
மெல்லக் கசியத் தொடங்கியது ரத்தம்
அந்த ரத்தத்தில்
அப்படியே கரைந்தன அத்தனை கனரக வாகனங்களும்

இன்னும் வாசத்தோடு ஒளிர்ந்துகொண்டேயிருக்கிறது நிழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்நீலப் பறவைகள்

மஞ்சள் முகில்களைக் கொத்திச் செல்கின்றன
வெண்நீலப் பறவைகள்
சற்று முன்தான் அந்த வெண்நீலப் பறவைகள்
எங்களைக் கடந்து சென்றன அல்லவா!

அதோ அவரேதான்,
அந்தப் பறவைகளின் தோழன்
எங்களூர்க் காத்தான்
தந்தானா தானே.. தன்னானத் தானே...
தக தெய் தெய் தந்தானத் தானே...
தக தெய்... தகிடதத் தெய்..
என்று கூத்துக் களரியில்
ஆடிப்பாடி அமர்க்களம் பண்ணிடும் வீமன்,
வித்தகன்

வெண்ணீலப் பறவைகள்
அலகினால் கொத்திச் சிறகினால் ஏந்தி
அழைத்துக்கொண்டு போகின்றன அவரை எங்கோ..

மஞ்சள் முகிலும் வெண்ணீலப் பறவைகளுமான
உலகொன்றில் கூத்தாடப் போகிறார்
எங்களூர்க் காத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளபளக்கும் கத்திகளுக்கு நடுவே

பளபளக்கும் கத்திகளுக்கு நடுவே
யாரோ நடந்து போகிறார்கள்

எந்த நொடியில் குருதி பீறிடும்
எக்கணத்தில் தலைகள் துண்டாடி விழும்
எத்தனை உடல்கள் வெட்டுண்டு சரியுமென்ற பதற்றம்
எல்லோரையும் பற்றிப் பிடிக்கிறது

யாராயிருக்கும் அது
ஏனிப்படிச் செல்ல வேண்டும்
என்ற பதற்றத்தோடு கேட்கிறாள் ஞானச்செல்வி

பெருங்குரலில் ஊழையொன்று கேட்கிறது

....இப்படித்தான் கத்திகளின் நடுவே வாழ்ந்து முடித்தோம்
என்று சொல்லும் ராசம்மாக் கிழவிக்குத் தெரியுமா
கத்திகளின் நடுவேதான் நாங்களும் நம் நிழல்களும்
பதறியபடி நிற்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணிசை

இருளையும் ஒளியையும் இத்தனை அளவாகக் கலந்து
நம்முன்னால் வைத்துச் சென்றது யார்?

இந்தக் கணங்கள் இப்படியே இருக்கக் கடவது என்று
பிரார்த்திக்கிறது வெண்பூனை

தியானத்தில்
விழி மூடிச் சிரிக்கின்றன வெண்கிளிகள்

பரவசமா துயரிழைய அவிழ்தலா?
அமுதமாய்ப் பொங்கி வழிகிறது
விண்ணிசை

மூண்டெரியும் நெருப்பின் நடனத்தோடு
ஆற்றோரம் நடந்து செல்கிறாள் என்னுடைய கிளி

கிண்கிணி மணியொலிக்கத்
தலையசைக்கும் எருதுகளை அழைத்துக்கொண்டு
மரங்கள் அடர்ந்த சிற்றொழுங்கையில் போகும்
மதனராஜனைத் தொடர்கிறது பரிதி

ஒற்றைச் சுடராகி ஒளிரும் வானவிளக்கை
நோக்கிக் குவிகிறதென் சிரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படியே நிகழ்ந்துகொண்டிருந்தது

அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள்
அதை வேறு எப்படிச் சொல்ல முடியும்? என்று
அவர்களுக்குத் தெரியாது
எனக்கும் தெரியாது

அது எவ்வளவு உண்மையென்று எனக்குத் தெரியவில்லை
ஏன் அவர்களுக்கும் அதைப் பற்றித் தெரியாது
ஆனாலது உண்மையாகவுமிருந்தது
பொய்யாகவுமிருந்தது

அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே
அது அப்படியே நிகழ்ந்துகொண்டிருந்தது
அப்படி நிகழ்ந்துகொண்டிருப்பது ஆச்சரியமா இல்லையா
எனத் தெரியவில்லை
ஆனாலது ஆச்சரியமாகவும் ஆச்சரியமற்றுமிருந்தது

நிகழ்ந்துகொண்டிருப்பதை விவரிப்பது வேறு
விவரித்துக்கொண்டிருக்கும்போதே நிகழ்வது வேறு
என்று யாரோ சொல்லிக்கொண்டிருந்தனர்

அப்படியென்றால் நீ தீர்க்கதரிசியா குறிசொல்லியா
என்று யாரோ கேட்ட சத்தம் கேட்டது

இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கும்போதுதான்
கடவுள் வந்து
நம்மோடு கூட இருந்து
ஒரு பிளா கள்ளுக் குடித்தார்
பிறகு கேட்டார்
"உமா மகேஸ்வரியின் கவிதைகளைப் படித்தீர்களா?" என்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிவனே, இதுவென்ன கேள்வி
சக்தியின் பாதச் சுவடுகளை அறிந்த பிறவி நானன்றோ” என்றான் மாயன்
“சிவசக்தியை யானறிவேன்” என்றான் பதற்றத்தோடு தாமரையான்
கெக்கட்டமிட்டுச் சிரித்த கடவுளின் கண்களிலிருந்து
நீர் தெறித்துக் கடலாகியது
“ஏது இந்தச் சிவ தாண்டவம்!” என்று கலங்கினேன் யான்

“அதைப் பற்றி அவர்கள் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்”
என்றார் கடவுள்

“எதைப் பற்றி?” என்றான் மாயன்
“அதைப் பற்றித்தான்” என்ற கடவுளின் கண்களில்
கள் மலர்ந்து, மணம் வீசியது

உமா மகேஸ்வரியின் கவிதைகள் வானெங்கும் பறந்து
நட்சத்திரங்களாகின
அந்த வானத்தின் கீழ்தான்
எங்களுடைய உலகம் அன்றிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சின் பேரின்பத்தில்

பேச்சின் பேரின்பத்தில்
நாங்கள் திளைத்துக் கிடந்த அன்றுதான்
துண்டிக்கப்பட்ட கைகளை மரமாக்கி நட்டவள்
நம்மைக் கடந்து சென்றாள்

அன்று அவள் நட்ட மரங்கள்
தெருநீளம் வளர்ந்து மலர்கின்றன
அவற்றின் நிழல்களும் கனிந்து வாசம் வீசுகின்றன
இதோ ஒரு மழைக்குடையாக
இன்று என் தலையின் மேலே சிறகு விரித்து நிற்கிறதே
ஒரு கை விருட்சம்

இந்த மரங்களிலிருந்து ஐந்தாறு சிறுவர்கள்
பழங்களைப் பறித்துண்கிறார்கள்
கைகளின் வாசனை ததும்பும் பழங்களை
வியப்புடன் பார்க்கிறான் ஒரு சிறுவன்

அது துண்டிக்கப்பட்ட கையொன்றின் வாசனை என்று
அவனுக்கு யார் சொல்வது?
அந்தக் கைப் பெண் முகத்தை
யாரவனுக்கு அடையாளம் காட்டுவது?

வரலாற்றின் கண்களில் தவறிய
ஒளிமுகத்தை வைத்துக்கொண்டு
தடுமாறுகிறேன் நான்

(யுத்தத்தில் கைகளை இழந்த பெண்களுக்கு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறந்து செல்பவன்

விடுதலைக் கனவு அவனைப் பறவையாக்கியது
பறவையாகியவனின் சிறகுகள்
எல்லைகளைக் கடந்து
வானத்தையும் பூமியையும் அணைத்துக்கொண்டதற்கு
நான் சாட்சியாக இருக்கிறேன்

நாங்கள் சமாந்தரமான பயணிகளாக
பயணித்த தூரங்களெங்கும்
சனங்களின் துயரைத் தானியமாகத் தின்று
அந்தப் பறவை தன் சிறகுகளை விரித்ததைக் கண்டேன்

அவனோடொரு பெரும் பறவைக் கூட்டம்
பறவைக் கூட்டத்தோடவன்
என்றவாறாகச் சேர்ந்த பறவைகளிடம்
வானமும் பூமியும் வசமாயிற்று
வாழ்வும் நிலமும் அழகானது

ஒருபோது போர்க்களம் அவனுடைய சிறகுகளை அறுத்தபோது
கால்களற்றுப் பூமியில் நிற்கவே முடியாது சரிந்தான்

இனி நடக்கவும் முடியாமல்
விடுதலைக் கனவு அவனைச் சிறையிட்டதோ
என்ற மலைத்துயரில் மனதிடிய
கால்களற்றவனைப் பற்றிய என் உலகம் மூச்சடைத்தது

கால்களற்றவனோ அதோ பறந்து செல்கிறான்
அவன் பறக்கும் திசையெங்கும்
ஒளிர்கின்றன பாதைகளும் கோலங்களும்

(போராட்டக்களங்களில் கால்களற்றவர்களுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

ஒரு கதை என்னை வந்து சேர்ந்தது
ஒரு கதை என்னை விட்டுச் சென்றது
ஒரு கதை என்னைச் சுற்றிக்கொண்டே நிற்கிறது
ஒரு கதை என்னுடன் சேர்ந்துகொள்கிறது
ஒரு கதை என்னை அழைத்துக்கொண்டு போகத் துடிக்கிறது
ஒரு கதை என்னுடைய நிழலில் படுத்துறங்குகிறது
ஒரு கதை என்னில் எரிந்து உருகுகிறது
ஒரு கதை என்னிலிருந்து விரிகிறது
ஒரு கதை என்னிடமிருந்து அழிகிறது
உன் கதை என் கதை என்பதை எக்கதை சொல்லும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தம்

மன்னிப்பின் நிறம் என்னவென்று எவருக்கேனும் தெரியுமா?
திடீரென இந்தக் கேள்வி என்னிடம் உருவானபோது
நண்பர்களைத் தொலைபேசியில் அழைத்துக் கேட்டேன்
எவருக்கும் அதைப் பற்றித் தெரியவில்லை
சட்டையை அணிந்துகொண்டு,
வெளியே சென்று கடைக்காரரிடம் கேட்டேன்
முறைத்தவர்,
கடையிலிருந்த பொருட்களையும் தராசையும்
என்னையும் மாறி மாறிப் பார்த்தார்
பிறகு தராசைப் பார்த்துக் கும்பிட்டார்
அங்கிருந்து வெளியேறி
நூலகத்துக்குச் சென்று ஒவ்வொரு புத்தகமாகத் திறந்து பார்த்தேன்
சில புத்தகங்களில் மன்னிப்பைப் பற்றி எழுதப்பட்டிருந்த போதும்
மன்னிப்பின் நிறத்தைப் பற்றி எந்தக் குறிப்பும் இருக்கவில்லை
அங்கிருந்த நூலகரிடம் கேட்டேன்
அவருக்கும் தெரிந்திருக்கவில்லை
சாந்திதேவியிடம் சென்று கேட்டேன்
"உன்னை மன்னிக்கவே முடியாதடா" என்றாள்
வேறு வழியின்றி
சைக்கிளை எடுத்துக்கொண்டு
மணல் தெருக்களைக் கடந்து,
ஒற்றைப் பனையடி வயலின் ஊடாக,
விசுவிடம் போனேன்
பொழுதடைந்து
நள்ளிரவாகியும் நிறத்தைக் கண்டறியவில்லை இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசு மட்டும் அவிழ்ந்திருந்தான்
நூறாயிரம் இழைகளாக
அவனிடம் விடைபெற்றுப் படியிறங்க
யாரோ சொல்வதாகக் கேட்டது,
"உன் அந்தரங்கத்தின் நிறமே அது
அந்தரங்கத்தின் நிறமே உண்மையின் நிறமும்" என

உலர்ந்த நாக்கில் ஊறியது அமிர்தம்
காலிலே தைக்கிறது முள்
இதயத்தில் பாய்கிறது சன்னம்
ஊசியாய்க் குத்துகிறது போர்வை
எரிந்துகொண்டிருக்கிறது படுக்கை...
நூறாவது தடவையாகவும் மறுதலிக்கப்பட்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் கண்ணீர்

இனிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை
எல்லாப் பேரேடுகளிலும்
அவர் தன்னுடைய பெயரையே எழுதி வைத்திருந்தார்
வானத்தையும் அவர் தன்னுடைய பெயராகவே மாற்றியிருந்தார்
பூமியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை
அது அவருடைய பெயரிலேயே இருந்தது

கடல், அதிலிருக்கும் மீன்கள், காற்று, அதிலே ஆடி அசையும் கொடிகள்,
புழுக்கள், பாம்புகள், புக்கள், கனிகள், அவற்றின் வாசனை
வானத்துக்கும் பூமிக்குமிடையில் பறக்கும் பறவைகள்
எல்லாம் அவர்தான்

கடவுள் அவையாகியிருந்தார்
அவையே கடவுளாகி இருந்தன

கடவுளை நெருங்கியிருக்கும் விதி
எனக்கு விதிக்கப்பட்டது

அந்த விதியின் நிமித்தமாக
நான் கடவுளோடிருந்தபோது
அவர் குளிப்பதைக் கண்டேன்
அந்த மேனி
முத்தெனச் சுடர்ந்து பேரானந்தரை ஞாபகமெடுத்தது

அவர் நடந்து வந்து கூடத்துள் நுழைந்த வேளை
அவருடைய தொப்பை
ரகசியமாகத் துள்ளி "சம்மாட்டி" இரத்தினத்தின் வயிற்றை நினைவுட்டியது
அவர் தூங்கிய வேளை
பொன்னம்பலம் முதலாளியின் குறட்டைச் சத்தம் கேட்டது
அவர் தெரிவில் சென்றபோது
உஷாச் சித்தியின் அலங்காரம் தெரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய வயிற்றைக் கண்டேன்
பெரிய தேவன் வயிறாக இருந்தது

அவருடைய மலத்தைக் கண்டேன்
அது என்னுடைய மலம் போலவேயிருந்தது

சற்றுப் பதற்றமாக இருந்தாலும்
கடவுளோடிருப்பதையிட்டு மகிழ்ந்திரு என்றார் குருவானவர்

குருவானவருக்கு நன்றி

அவருடைய மலத்தைக் கண்ட நாளிலிருந்து
கடவுள் மெல்ல மெல்ல
எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டுக்கொண்டிருந்தார்

இறுதியில்
எல்லாம் கழன்றுதிர
அவர் என்னைப் போலவே மாறியிருந்தார்

குருவானவர் ஒருநாள்
என்னைப் பிரார்த்தித்தார்

நான் கடவுளை விலக்கத் தவித்தேன்
கடவுள் தேம்பித் தேம்பி அழுதார்
அவருடைய கண்ணீரும் என்னுடைய கண்ணீரைப் போலவே இருந்தது

ஆமாம் உங்களுடைய கண்ணீரைப் போலத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்க முடியாத காயங்களின் ஒளி

ஹரிணி திரும்பத் திரும்பத்
தனது சிறிய காயத்தை
என்னிடம் காண்பித்துக்கொண்டிருக்கிறாள்

தமது புண்களைக் காண்பிக்க
மனிதர்கள் பிரியமானவர்களைத் தேடிக்கொண்டே இருக்கிறார்கள்
என்கிறார் போகன் சங்கர்

நல்லது.
ஆனால், எங்களுடைய காயங்களைக் காண்பிக்க முடியாது
என்கிறது
பயங்கரவாதச் சட்டத்தின் பதின்மூன்றின் கீழ் நான்காவது சரத்து
பார்த்தீர்களா, கவிதைக்கும் சட்டத்திற்கும்
கவிக்கும் இடையிலான வெளியில்
அழிக்கக் கடினமான முட்காடே விளைந்து கிடக்கிறதென்பதை

காயங்களை மூடு, வலியை அடக்கு
வடியும் கண்ணீரையும் குருதியையும் தெரியாமல் துடை
துயரையும் இழப்பையும் மற
எரியும் நெருப்பையும் புகையையும் மறை
அழிவின் தடயங்களை அகற்று
யாராவது வரக்கூடும்
அதற்கிடையில்
உன்னை அலங்கரித்து மகிழ்ச்சிப்படுத்து
என்று அவசரப்படுத்துகிறார்கள்.

ஒப்பனைகளை மீறித் தெரிகிறதே இழவு?
என்ற பாட்டியின் வாயை ஓடிவந்து மூடுகிறார் அதிகாரி

"தாகமாயிருக்கிறது" என்கிறேன்

விடாயைப் பற்றிப் பேசுவதற்கு இது நேரமில்லை
என்கிறார் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்க்கும் உடலை வெறித்துப் பார்க்கின்றன அதிகாரக் கண்கள்
கொட்டாவி விடப்போகிறேன் என்கிறாள் அருகிருக்கும் பெண்
ஆபத்தான காரியங்களைச் செய்யாதே என்று எச்சரிக்கிறார்
காவலர்
அந்த நேரம் பார்த்து யாரோ விட்ட குசுவின் மணமெழ
யாரிங்கே தேசத்துரோகமிழைப்பது? என்று
தேடத்தொடங்கினார் புலன்விசாரணையாளர்

“நாங்கள் என்ன செய்வோம்” என்று பதறியவர்களை
முறைத்துப் பார்க்கின்றார் மேலாளர்

தனது காயங்ளைக் காண்பிக்கத் தவிக்கும் ஹரிணியை
எப்படிப் பாதுகாப்பதெனத் தெரியாமல் தவிக்கிறேன்

இதற்குப் பிறகும்
.....கவி இவ்வுலகில்
காயங்களைத் தவிர வேறு ஏதாவது
காண முடியாதா ?
என்று ஏங்குகிறான் என்று எழுதிவிட்டு
எப்படி நிம்மதியாகத் தூங்கப்போவீர்கள் போகன்?

ஒளி எதில் ஒளிந்துகொள்ள முடியும்?
என்று நானும்தான் கேட்கிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுக்கப்பட்ட வார்த்தைகளின் விதி

என்ன சத்தம் அங்கே?
சொற்களின் மரண ஒலியா?
யாருடைய குரலை
யார் நெரித்துக் கொல்லுமொலியது?

அச்சம் மேலிட,
சத்தமின்றி
இருளில் பதுங்கியபடி
தங்கள் சொற்களைக் கட்டுப்படுத்திக் கொண்டோடுவோர்
வந்து சேர்கின்றனர் பதற்றத்தோடு என்னிடம்

ஒளிரும் விண்மீன்கள்
அனலும் தணல்
கண்விழிக்கக் காத்திருக்கும் விதைகள்
என்றிருக்கும் அவர்களுடைய
வெளிப்படுத்த முடியாச் சொற்களையெல்லாம்
எங்கே மறைப்பேன்?
அவற்றின் இனிய சங்கீதத்தை
எங்கே புதைப்பேன்?

புதைக்குமிடத்தில் அவை முளைத்துத் துளிர்க்குமே!
நாளையவை பெருங்காடாகுமே!
அந்த இசைக் காட்டை என் செய்வேன்?
இடிமுழக்கத்தை ஏது செய்ய?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காட்டிலே குயிலும் குருவிகளும் அணிலும் மானும்
மயிலும் குரங்கும் சிறுத்தையும் பல்லியும்
சத்தமிட்டுப் பாடுமே
ஆயிரமாய் மலர்கள் பூத்துக் காற்றில் வாசமெழுப்புமே
காடென்பது உயிர்களின் கூடெனக் கூவியொலிக்குமே

அப்போதிந்தப் பிரபஞ்சம்!
இதையெல்லாம் எப்படி மறைத்திட?

மறுக்கப்பட்ட வார்த்தைகளின் விதி
இப்படித்தான் காடாகி வளரும் என்றால்...

சுயம்புவாய் ஒலித்திடும் ஒளிகூடிய சொற்களை
மண்ணிற் புதைக்க
விண்ணிலவு ஒளிரும் சங்கீதமாகியதே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையிடமிருந்த கேள்வி

சிறகுகள் விசைகொண்டெழ
அந்தக் குரல் எழுந்து
வெளி நோக்கிச்செல்லத் துடிக்கிறது

இரக்கமெல்லாம் உழுத்து
கருணை கரைந்தழிந்தாயிற்று மகளே!
பாதகம் சூழ்ந்திருக்கும் உலகமிதன்
நிலையறிந்து உள்ளடங்கெனத் தடுத்து
அமைதிப்படுத்த விளையும் அம்மாவில்
பதற்றமும் துக்கமும் தீயாய்ப்பற்றிச் சூழ்ந்தெரிக்கிறது

இந்த வெளி எனது என்று
எழுந்த குரலைக் கைது செய்யும்படி
கட்டளை வந்து மிரட்டுகிறது
கண்களை உருட்டி

எதிர்த்துத் திமிறும் குரலைத் தன் முந்தானையால்
மூடிவிடத்துடிக்கிறாள் அம்மா
அன்பின் சிறகுகள் கொண்டு
வாரியணைத்து அமைதிப்படுத்துகிறாள்

உள்ளிருந்து எழுகின்ற கேவலை
தடுக்க முடியாமல் தவித்தாடுகின்றன திரைச்சீலைகள்

நிலமற்றவரைக் குறித்துக் கடவுளின் அபிப்பிராயங்கள்
என்ன அம்மா என்று கேட்கிறாள் குழந்தை

கடவுள் நமக்காகப் பேசுவதில்லை
அவரிடம் சொற்களுமில்லை வார்த்தைகளுமில்லை என் கண்ணே
என்றமைதிப்படுத்துகிறாள் அன்னை

கொப்பளித்துப் புரண்டோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமற்ற நம் கண்ணீருக்கு அணையென்ன?
அதைக் கட்டிட யாருண்டு? அதற்கென்ன சட்டவிதியுண்டு?

இந்தக் கண்ணீரைத் தடுத்தாட்கொள்ளக் கடவுளிடம்
சித்தமுண்டா அம்மா? என்று
மலைக்கேள்வியை எழுப்புகிறாள் மகள்

விசும்பும் அன்னையின் கேவலில்
கடவுளின் வெட்கம்
செக்கச் சிவப்பென நிறங்கொண்டு உருகியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தைப்பெண்

15 JUN 2022
பொது நூலகம் யாழ்ப்பாணம்

கூடாரத்தின் கீழே
இரவுகளை வைத்து மூடிவிட்டுச் செல்லும்
பெண்ணைப் பின்தொடர்ந்து சென்றவன்,
இடையில் வழி தவறிச் சென்று
கடிகார முட்களின் முனைகளில் சிக்கினான்

வெள்ளரிப் பழங்கள் வெடித்து மலர்ந்த தோட்டத்தில்
அவள் கத்தரிப்பூவாகிக் கனிந்திருந்தாள்
பருத்திச் செடிகள் பூத்துக் களித்த வளவில்
அவள் பலாப்பழமாகிப் பூத்துக் களித்தாள்

கடிகார முட்களிலிருந்து விடுவித்துக் கொண்டோடி வந்தவன்
அவளருகே வர
அவள் பகலாக மாறினாள்
திகைத்தவன், ஒளியின் விநோதம் கண்டு
தன்னுடலையும் ஒளியாக்கினான்

ஒரு பெரிய படையணி
அவர்களைச் சுற்றி வளைத்தது

மூடிவைத்த இரவை எடுத்து
அதுவே தன்னுடைய காதற் பரிசென்று
தம்மைச் சுற்றிவளைத்த ஒவ்வொருவருக்கும்
பகிர்ந்து கொடுத்தாள்

கூடாரத்தை எடுத்து அவர்களைச் சுற்றி மூடினாள்
ஒளியைப் பெருக்கி
தன்னை விடுவித்தாள்

பொது நூலகம் யாழ்ப்பாணம்
13824 CC

ஒளிக்குச் சுவடு இல்லை என்பதால்
அதைத் தொடர்ந்து
அவர்களைப் பிடிக்க முடியவில்லை
என்று எழுதி வரலாற்றிடம் கையளித்த படையணி
அவள் கொடுத்த காதற் பரிசோடு
உறங்கியது கூடாரத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

286306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இந்தக் கவிதைகளின் புனைவு வெளியில் நீங்களும் இயற்கையும் இணைந்திருக்கிறீர்கள். கிளைத்து வினோதமாக விரிந்து செல்லும் இந்தப் புனைவுப் பரப்பில் புதிய பாதைகள் தென்படுகின்றன. பழகிய வழிகள் தெரிகின்றன. ஆனால் வேறாக. எல்லாமே ஒரு கனவுபோல தெரியும் கணத்தில் சட்டென ஒரு மின்னல் தோன்ற நிஜம் விரிகிறது. அதில் தெரிவதைக் கண்டுணரும்போது மையங்களைச் சிதைத்துச் செல்லும் இந்தக் கவிதைகளின் தீவிரம் உங்களுக்குள் மூட்டுகிறது பெருந்தீயை. கூடவே பொழிகிறது பெருமழையும் பனியும். சுழன்றடிக்கிறது புயல். சமநேரத்தில் படருகிறது பேரமைதி. இதற்குள்ளேயே இருக்கின்றன உங்களுடைய குரல்களும் கனவும் நம்பிக்கையின்மையும் நம்பிக்கைகளும்.

புலம்

ISBN 978-81-9078-841-0

கவிதைகள் ₹120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org